ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

17.07.2013 - மலர் 10, இதழ் 20



## வரலாற்றுப் புகழ்மிக்க படிக்கட்டுகள்

## விண்வெளி வீரர்களுக்கு புதிய உடை





## பரீட்சையில் பதற்றம் தவிருங்கள்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பண்டாரவன்னியனின் இறுதிப்போர்

ஆங்கிலேயருக்குப் பணிந்து ஆட்சிசெய்யப் பண்டாரவன்னியனின் மனம் இடம் தரவில்லை. ஆங்கிலேய அந்நியர்களை இந்நாட்டை விட்டுத் துரத்தும் வரை நான் ஓயப்போவதில்லை எனச் சபதம் எடுத்தான். ஆங்கிலேயர்களுடன் மிகக் கடுமையாகப் போர்புரியவும் அவன் ஆயத்தமானான். எதற்கும் அஞ்சாத துணிச்சல் கொண்ட பண்டாரவன்னியன் நன்கு பயிற்றப்பட்ட வீரர்களுடன் ஆங்கிலேயருக்கு எதிராகத் தனது போராட்டத்தை ஆரம்பித்தான். மீண்டும் பண்டாரவன்னியன் படையெடுத்து வந்துவிட்ட செய்தியை அறிந்த ஆங்கிலேயப் படைகள் உக்கிரமாகப் பண்டாரவன்னியனை



எதிர்த்துப் போர் புரிந்தன.

பண்டாரவன்னியனும் அவன் படையினரும் எதற்கும் அஞ்சாது நீண்ட நேரம் எதிர்கொண்டு போர் புரிந்தார்கள். இந்தப் போர் அக்காலகட்டத்தில் மாங்குளத்தை அண்மித்த உடையாவூர் எனும் இடத்தில் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலுக்குப் பண்டாரவன்னியன் கண்டித்திசாவைமார்களின் உதவியை நாடவில்லை. ஏனெனில், பண்டாரவன்னியனுக்கு ஆதரவான கண்டியிலிருந்த திசாவைமார்கள் மாற்றப்பட்டுப் புதிய திசாவைமார்களை அங்கு ஆங்கிலேயர்கள் நியமித்திருந்தார்கள். புதிய கண்டித் திசாவைமார் பண்டாரவன்னியனோடு ஒட்டுறவை வளர்த்துக் கொள்ள விரும்பவில்லை. பதிலாக ஆங்கிலேயருக்கு விசுவாசமாகச் செயற்பட்டார்கள். இங்கு திசாவைமார் என்பது பகுதித் தலைவர்கள் என்று பொருள்படுகிறது.

இவ்வாறு ஆதரவற்ற புதிய திசாவைமார்கள் தென்பகுதியில் நியமிக்கப்பட்டபோதும் உடையாவூரில் பண்டாரவன்னியன் ஆங்கிலேயரை நோக்கி பெரும் எதிர் சமரை மேற்கொண்டான். இதுவரை காலமும் திடீர்த் தாக்குதலையும், சிறு சிறு கலகங்களையும் ஆங்கிலேயருக்கு எதிராக மேற்கொண்டு வந்த பண்டாரவன்னியன் மிகக் கடுமையாக மேற்கொண்ட பெருந்தாக்குதல் இதுவாகும். பண்டாரவன்னியன் இவ்வாறான தாக்குதலை மேற்கொள்வான் என ஆங்கிலேய நிர்வாகம் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. சிறு படைப் பிரிவே பண்டாரவன்னியனிடம் இருக்கிறது என்பதை அவர்கள் நன்கறிந்திருந்தும் இப்படி ஒரு சமரினை அவனால் எப்படிமேற்கொள்ள முடிந்தது என்பது அவர்களை ஆச்சரியப்பட வைத்தது.

இருந்தாலும், அவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து மேலதிகப் படையினரை வரவழைத்து பண்டாரவன்னியனுக்கு எதிரான நேரடித் தாக்குதலை நடத்தினார்கள். பண்டாரவன்னியனும் இந்த நீண்ட போரினை தங்கு தடையின்றி நடத்தினான். இந்தப் போரானது, பதினெட்டு நாட்கள் தொடர்ந்தன. மாங்குளத்தில் இருக்கும் உடையாவூரில் இருந்து ஆரம்பித்த இப்போர், முருகண்டியை நோக்கி முன்னேற்றகரமாகப் பண்டாரவன்னியனால் முன்னெடுக்கப்பட்டது.

அப்போது ஆங்கிலேயப் படைகள் தமது முழுப் பலத்தையும் பிரயோகித்தமையால், பண்டாரவன்னியன் இப்போரில் படுகாயம் அடைந்தான். படுகாயம் அடைந்த பண்டாரவன்னியன் அவனது படை வீரர்களால் பனங்காமத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டான். பண்டாரவன்னியன் பதினெட்டாம் நாள் போரில் படுகாயம் அடைந்ததால், அன்று முதல் அவ்விடம் 'பதினெட்டாம் போர்' என அழைக்கப்படலாயிற்று. பனங்காமத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட பண்டாரவன்னியன் அங்கு சிகிச்சை பலனின்றி மறுநாள் மரணமடைந்தான். தேசப் பற்றுக்கொண்டு இறுதிவரை ஆங்கிலேய அந்நியரை எதிர்த்து நின்ற மன்னன் பண்டாரவன்னியனின் உடல் பனங்காமம் என்னும் வீர வரலாற்றின் விளைநிலத்தில் தீயோடு சங்கமித்தது.

1811 ஆம் ஆண்டு மன்னன் பண்டாரவன்னியனின் மறைவுக்குப் பின்னர் ஆங்கிலேயரின் ஆட்சி எதுவித தடையுமின்றி வளர்ச்சி கண்டது.(முற்றும்)

# எனது விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கு 'விஜய்' பத்திரிகையே உந்துசக்தியாகியது

## கௌரவிப்பு விழாவில் மாணவன் வினோஜ்குமார் தெரிவிப்பு

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான 'பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவது எவ்வாறு?, என்பது தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கொன்று,



செறோ ஸ்ரீலங்கா அமைப்பின் தலைவர் றினோஸ் ஹனீபா, பொதுச் செயலாளர் எம்.ஜரூக் முஹமட் மற்றும் அமைப்பின் கல்முனைக்கான இணைப்பாளர் எல்.எம்.சர்ஜுன் ஆகியோர் வினோஜ்குமாரை கௌரவிக்கின்றனர்.

கல்முனை செறோ ஸ்ரீலங்கா அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் உளவள ஆலோசகருமான றினோஸ் ஹனீபாவினால் கல்முனை அல்-மிஸ்பாஹ் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது, சம்மாந்துறையைச் சேர்ந்த இளம் கண்டுபிடிப்பாளரான சோமசுந்தரம் வினோஜ்குமார் என்ற மாணவன் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

எரிந்த மெழுகுவர்த்தியை மீள் சுழற்சி மூலம் உருவாக்குதல், கையடக்கத் தொலைபேசி பெற்றரியை நடக்கும்போதே 'சார்ஜ்' செய்தல் மற்றும் நவீன எலிப்பொறி முறை போன்ற இன்னும் பல கண்டுபிடிப்புக்களை இவர் மேற்கொண்டுள்ளார். தற்போது சம்மாந்துறை கோரைக்கல் வித்தியாலயத்தில் சாதாரண தரத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் வினோஜ்குமாரின் முயற்சியைப் பாராட்டி செறோ ஸ்ரீலங்கா அமையம் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தது.

இங்கு தனது கருத்துக்களைத் தெரிவித்த மாணவன் வினோஜ்குமார், "எனது இந்த சாதனை நோக்கிய முயற்சிகளுக்கு சாய்ந்தமருதைச் சேர்ந்த ஆசிரியர் முஹம்மட் ஆரிப் அவர்கள் மிகவும் பக்கபலமாக இருந்தார். அவரை எனது தாய் தந்தையர்க்கு அடுத்ததாக என்றும் நான் நினைவு கூர்வேன். மேலும், எனது கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதற்கு அடிப்படைக் காரணியாக இருந்தது 'விஜய்' பத்திரிகைதான்.



இளம் கண்டுபிடிப்பாளர் வினோஜ்குமார் உரையாற்றும்போது...

அதில் வரும் சில புதிய கண்டுபிடிப்புக்கள் பற்றிய தகவல்கள் என்னை இத்துறையில் ஈடுபட வழியமைத்தது" என்றும் குறிப்பிட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜய

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk

# நியூஸிலாந்தில் கரையொதுங்கிய 'கடல் ராட்சதன்'





**பயங்கரமான தோற்றம்கொண்ட ராட்சதக் கடல் விலங்கினமொன்றின் இறந்த உடல், அண்மையில் நியூஸிலாந்தின் ப்ளெண்ட் வளைகுடாவை அண்மித்த புகெஹினா கடற்கரைக்கு அடித்து வரப்பட்டுக் கரை ஒதுங்கியிருந்தது.**

நியூஸிலாந்தைச் சேர்ந்த எலிசபெத் ஆன், இதனைக் காணொளிப்படுத்தி யூடியூப்பில் பதிவேற்றம் செய்துள்ளார். கரையொதுங்கிய குறித்த ராட்சத விலங்கின் பெரும்பாலான உடல் பாகங்கள் சிதைவடைந்த நிலையிலேயே உள்ளன.

இது போன்ற மர்மமான தோற்றங்களைக்கொண்ட ராட்சத கடல் விலங்குகள் குறித்து வெளிஉலகுக்குத் தெரியவரும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில், 2011 இல் சீனாவின் குவான்டொன் கடற்பரப்பில் 55 அடி நீளம்கொண்ட ராட்சத கடல் விலங்கினம் ஒன்று சீன மீனவர்களின் மீன்பிடி வலையில் சிக்கியிருந்தது. ராட்சத உருவம் கொண்ட அதனை, கரைக்கு இழுத்து வரமுடியாத காரணத்தினால், அதனைக் கடலிலேயே விட்டு விட்டனர். இந்தச் சம்பவத்தினைத் தவிர, கடலில் இருந்து கரையொதுங்கிய ராட்சத விலங்குகளின் உடல் பாகங்கள் தொடர்பிலும் பல சம்பவங்கள் அறியக்கிடைத்துள்ளன. எனினும், இவ்வாறு இறந்து கரையொதுங்கும் விலங்குகளின் உடற்பாகங்கள், பெரும்பாலும் அழுகிய நிலையிலேயே இருப்பதனால், அவற்றை உறுதியாக இனங்காண்பது கடினமான விடயமாகவே இருக்கின்றது.

நியூஸிலாந்தில் கரையொதுங்கிய குறித்த ராட்சத விலங்கின் உயிரற்ற உடல் பற்றிய காணொளியை யூடியூப்பில் பதிவேற்றிய எலிசபெத் ஆன், அச்சம்பவம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில்;

"இதன் உடலின் பிற்பகுதி சிதைவடைந்துள்ளது. ஆனால், அதன் தலைப்பகுதியினைப் பார்க்கும்போது, அது சுமார் 9 மீற்றர் நீளம்கொண்டதாக இருந்திருக்கும் என்று கருத முடியும். கடலில் ஏற்பட்ட புயல் காரணமாகவே இது கரையொதுங்கியுள்ளது. கடலில் இந்த விலங்கினை ஏதாவதொன்று தாக்கியிருக்கக்கூடும்" என்றார்.

எனினும், இப்பகுதி வாழ் மக்களோ, இது பற்றி பல கதைகளைக் கூறியுள்ளனர். இந்த விலங்கின் தோற்றம் டைனோசர் போன்று இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். அப்படியில்லாவிடின், ராட்சத சுறா மீன் அல்லது கடல் வாழ் முதலை அல்லது ராட்சத டொல்ஃபின் போன்ற ஏதாவதொன்றின் உடலாக அது இருக்கக்கூடும் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும், நியூஸிலாந்து உயிரின பாதுகாப்புத் திணைக்களத்திற்கும் கெலீ டால்ட்டன் மீன்வள நிலையத்திற்கும் இந்த விலங்கு தொடர்பான புகைப்படங்கள் ஆய்வுக்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.




இதேவேளை, நியூஸிலாந்தின் கடல்வாழ் உயிரிகள் தொடர்பான விசேட நிபுணரான அன்டன் வேன் ஹெல்டன், மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தையும் நிராகரித்துவிட்டார். குறித்த விலங்கினத்திற்கு இருக்கும் செட்டைகளின் அமைப்பின்படி, இது 'Killer Whale' எனும் கொடிய திமிங்கிலத்தினுடையதாக இருக்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். கொடிய திமிங்கிலங்கள் ஃபிஜி தீவுகளை அண்டிய கடலிலும் ப்ளெண்ட் வளைகுடாவை அண்மித்த கடலிலும் அதிகளவில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். எவ்வாறாயினும், இதனை உறுதிப்படுத்துவதற்கான ஆய்வுகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன.

-பிரியா

**வாசகர் முகம்**

இந்த வாரம் இடம்பெற்றிருப்போர்
**வி.தேவலக்ஷனா-வி.அபிலக்ஷனா,**
தெல்தோட்டை.



**DIPLOMA IN ENGLISH** விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
**கிலாஸ் போகாமலே ஆங்கிலம் படிக்கலாம்.**
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு
முழுப்பெயர் முகவரியைக் குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
மேலதிக விபரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

**பாடநெறியில் இணையும் அனைவருக்கும்**
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 3 மூன்று
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் (Watch) ஒன்று./மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ். என்பன வழங்கப்படும்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1600/- மாத்திரம் அறவிடப்படும். வேறு கட்டணம் இல்லை.

**UNION EDUCATIONAL INSTITUTE**
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனகராஜபுரம் என்னும் நாட்டை ஜனகராஜ் என்னும் மன்னர் ஆண்டு வந்தார். அவருடைய நண்பர் கேகயபுரத்து மன்னர் கேகயன். ஜனகராஜ் மிகவும் கோபக்காரர். கேகயன் மிகவும் பொறுமைசாலி. அவர்கள் நண்பர்களாக இருந்ததே பெரிய விடயம்.

ஜனகராஜுக்கு என்ன காரணத்தினாலோ, புதுப்புது நாடுகளைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. அதன்படியே அவர் அடிக்கடி போரில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். இதையெல்லாம் கேள்விப்பட்ட கேகயன் போரை வெறுத்தார். எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ஜனகராஜ் கேட்கவே இல்லை. ஒரு தடவை ஒரு முக்கியமான விடயத்தைக் கலந்தாலோசிக்கக் கேகயன், ஜனகராஜ்புரத்திற்குப் போனார். ஆனால், ஜனகராஜனோ அவ்வேளையில், ஒரு நாட்டின்மீது போர் தொடுக்கப் போயிருந்தார். ஆகவே, வருத்தமடைந்தார் கேகயன்.

தன் வருத்தங்களைக் கடிதமாக எழுதி, ''எவ்வளவு மண்ணை நாம் வெற்றி கொண்டாலும் நம் உடல் ஆறடிக்குள்தான். ஆகவே, தயவுசெய்து சில காலத்துக்கு யுத்தம் வேண்டாம் என்று முடிவெடு!'' என்று எழுதித் தூதுவனிடம் கொடுத்துவிட்டுத் தனது நாட்டிற்குச் சென்றார். இரண்டொரு நாட்கள் சென்றன. மன்னர் திரும்பி வந்தார். ஓலையைச் சேர்ப்பித்தான் தூதன். ஓலையில் எழுதப்பட்ட விடயங்கள் ஜனகராஜ் மன்னரின் மனக் கொதிப்பைத் தூண்டிவிட்டன. "நாடு வெறி பிடித்தவனே, மிருகங்களைப் போல் தன் இனத்தையே எத்தனைக் காலம் அழிக்கப் போகிறாய். கொடியவனே, உன்னிடம் நட்பு கொண்டதைப் பாவமாக எண்ணுகிறேன்''



# ராஜத் துரோகம்

என்று எழுதப்பட்டிருந்தது.

ஜனகராஜன் அதற்குப் பதிலை எழுதித் தூதுவன் கையில் அனுப்பி வைத்தார். பிரித்துப் படித்த கேகயன், திடுக்கிட்டுப் போனார். அவ்வளவு கீழ்த்தரமாக அவரை விமர்சித்திருந்தார் ஜனகராஜ். சிந்தனையில் ஆழ்ந்த கேகயன், என்ன நடந்திருக்கும் என்று யூகித்துப் பார்த்தார். தான் எழுதப்பட்ட ஓலை அரண்மனையில் மாற்றப்பட்டிருக்கிறது. ஆகையால்தான், ஜனகராஜ் இவ்வளவு ஆவேசமாகப் பதில் கடிதம் எழுதி இருக்கிறார். தீர்மானமான யோசனைக்குப் பின்னர் கேகயன் ஓர் ஓலையை எழுதினார். அவரே மாறுவேடம் பூண்டு ஜனகராஜபுரத்துக்கு ஓலையுடன் சென்றார். கேகய தேசத்திலிருந்து மீண்டும் ஓலை என்றவுடன் அலட்சியமாக அதை வாங்கிப் பிரித்துப் படித்தார் ஜனகராஜ்.

''நண்பா, உன் தேசத்திலேயே உனக்கு எதிரிகள் இருக்கின்றனர் என்பதை உன் ஓலைமூலம் நான் அறிந்துகொண்டேன். வந்த இடத்தில் நான் எழுதிய ஓலை மாற்றப்பட்டு, உன் கையில் வேறு ஓலை தரப்பட்டிருக்கிறது. இந்த ஓலையில் உள்ள கையெழுத்துதான் எனது உண்மையான கையெழுத்து. அந்த ஓலையில் உள்ள கையெழுத்துடன் இதை ஒப்பிட்டுப் பார். உன் அரண்மனையில் வளர்ந்து விட்ட உனக்கு எதிரிகளென்கின்ற புல்லுருவிகளைக் களைந்தெறி'' -அன்புடன் கேகயன்.

ஜனகராஜ் சிந்தனையில் ஆழ்ந்தார். பின்னர் வந்த தூதனைக் கௌரவித்து தங்க வைத்துவிட்டு, தன் உண்மையான நலம் விரும்பிகளிடம் உண்மையைக் கண்டறிய உத்தரவிட்டார். மந்திரி நாகநாதனின் கையெழுத்தும், கேகயன் பெயரில் எழுதப்பட்ட ஓலையும் ஒத்திருந்தன. கேகயனின் மிகப் பழைய கையெழுத்துக்களும், புதிய ஓலை கையெழுத்தும் பரிசீலிக்கப்பட்டன. இவை ஒத்திருந்தன. மன்னருக்கு உண்மை விளங்கியது. நாகநாதன், தான் எழுதியதாக ஒப்புக்கொண்டான்.

அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. கேகயன் மாறுவேடத்தைக் களைந்தார். ஜனகராஜ் அகமகிழ்ந்து போனார்.

# அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....




பன்-பாலா

இதுவரை....

இராமபுத்திரனின் ஆலோசனைப்படி, இறந்துபோன மங்கோலியனின் உடைகளை அணிந்துகொண்ட அஷ்வின், தலைவரின் அறைக்குள் நுழைய ஆயத்தமானான்.

இனி...


இராமபுத்திரன் சிறுவர்களை அழைத்துக்கொண்டு தலைவரின் அறைவாயிலை அடைந்தார். ''இதுதான் தலைவரின் அறை, கண்ணாடிக் கதவுக்குக் கிட்டப் போய் கதவுக்கு மேல் மினி கம்ப்யூட்டர் இருக்கிறது. அதைப் பார்த்து 'நைன் நைன்' என்று இரண்டு தடவைகள் சொல். மங்கோலிய விஞ்ஞானியின் குறியீட்டு இலக்கம் அதுதான். கதவு திறக்கும்'' என்று கூறிய இராமபுத்திரன் அஷ்வினைக் கதவருகே விட்டுவிட்டுத் திரும்பினார்.

அஷ்வின் கண்ணாடிக் கதவை அண்மித்து இராமபுத்திரன் கூறியபடி செய்தான். அடுத்த விநாடி திறந்தது கதவு. மெதுவாக நுழைந்தான். ஒன்பது எண் கொண்ட கதிரையை அவசரமாகத் தேடினான். வட்டமேசை மாநாட்டில் அமர்ந்திருப்பது போல ஒன்பது விஞ்ஞானிகளும் அமர்ந்திருந்தார்கள். இரு ஆசனங்கள் வெறுமையாக இருந்தன. அதில் எது ஒன்பது? மங்கோலியன் அமர வேண்டிய நாற்காலி எதுவாயிருக்கும்? அதனை அடையாளம் கண்டு அண்மித்தால் மட்டுமே தலைவரை அருகில் குறிவைக்க முடியும். குழப்பத்துடன் ஆசனங்களை நோக்கி நடந்தபோது, ஒன்பது பேரும் குபீரென்று சிரித்தார்கள். கொடூரச் சிரிப்பு. அஷ்வின் வெலவெலத்துப் போனான்.

தலைவர் குரல் சிங்கத்தின் கர்ஜனையாகக் கேட்டது.

''சிறுவர்கள் என்று இராமபுத்திரன் உங்களுக்கு அளவுக்கதிகமாக சுதந்திரம் கொடுத்துவிட்டார். இராமபுத்திரனை ஏமாற்றிவிட்டால், நாங்களும் ஏமாந்துவிட்டதாக நினைக்கிறீர்களா! எங்களுடைய ஆராய்ச்சிக்கு நீங்கள் தேவை'' என மிரட்டும் குரலில் கூறிவிட்டு மேசை மீதிருந்த கம்ப்யூட்டரில் ஓர் அழைப்பு விசையை முடுக்கி விட்டார். அடுத்த நிமிடம் அறைக்கு வெளியே இருந்து ''உர்..... உர்....!'' என்று இரைச்சல் கேட்டது. அஷ்வின் திடுக்கிட்டான். என்னவென்று யோசிக்கு முன்னர் இயந்திர நாய் ஒன்று அஷ்வின் அருகில் வந்தது. அவன் கையை லபக்கென கௌவிப் பிடித்தது. இயந்திர நாய் கௌவிப் பிடித்தபோது மின்சாரம் உடலுக்குள் ஊடுருவுவது போலிருந்தது. நாய் கௌவிய கையைப் பிடித்துத் தரதரவென இழுத்துக்கொண்டு போனது.

நேரம் செல்லச் செல்ல இராமபுத்திரனும் சூதனும் பிரியனும் கொஞ்சம் பதட்டமாகிப் போயிருந்தார்கள்.



# இயந்திர நாய்!

''இன்னும் அஷ்வினைக் காணவில்லையே'' எனப் பிரியன் கவலையுடன் கேட்டான்.

'என்ன நடந்திருக்கும்' என யோசித்தார் இராமபுத்திரன். சிறிது நேரத்தில் விஞ்ஞானிகள் அனைவரும் அங்கு வந்தார்கள்.

வந்தவர்களில் ஒருவர், ''தலைவர் தனது பிரத்தியேக அறைக்குத் திரும்பிவிட்டார். உங்களைச் சற்று நேரத்தில் வந்து பார்க்கச் சொன்னார். இங்கே என்ன நடக்கிறது.....!'' அந்த விஞ்ஞானி கேட்டார்.

''இந்தப் பையன்கள் எமது சக விஞ்ஞானியை மடக்கி அவரின் ஆயுதங்களைப் பறித்துவிட்டார்கள். அதைக் காட்டி என்னையும் மிரட்டிவிட்டார்கள். பிறகு சக விஞ்ஞானியின் அங்கியினை மாட்டிக் கொண்டு அந்தப் பையன் தலைவரைப் பார்க்கவேண்டும் என்று வந்தான். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இவர்கள் இருவரையும் நான் மடக்கி விட்டேன். இப்பொழுது இவர்கள் என் கட்டுப்பாட்டில்'' என்றார் இராமபுத்திரன்.

அந்த விஞ்ஞானி இராமபுத்திரனைப் பார்த்து ''நீங்கள் போய்த் தலைவரைப் பாருங்கள்.இவர்களை இந்த அறையிலேயே பூட்டி வையுங்கள்!'' என்று கூறிவிட்டு விஞ்ஞானிகள் ஒருவர் பின் ஒருவராக வெளியேறிப் போனார்கள்.

இராமபுத்திரன் எழுந்து கொண்டார். அவர் இப்பொழுது ஒரு புதுத்திட்டத்துடன் சிறுவர்களுடன் போய்க்கொண்டிருந்தார்.

தலைவரின் அறைக்குள் சக விஞ்ஞானிகள் உட்படப் பத்துபேர் மட்டுமே நுழைய முடியும். அந்தப் பத்துப் பேரின் விபரங்கள் மட்டுமே பாதுகாப்பு ரொபோ வசம் உள்ளது. மங்கோலிய விஞ்ஞானி செத்துப் போய்விட்டதால், எஞ்சியிருக்கும் ஒன்பது பேரைத்தவிர வேறு யார் நுழைந்தாலும் ரொபோ சின்னாபின்னமாக்கிவிடும்.

இப்பொழுது இராமபுத்திரன் எதிர்பார்ப்பும் இதுதான். தலைவரும் இந்தச் சிறுவர்களும் ஒரே வேகத்தில் சாகடிக்கப்பட வேண்டும். விசாலமான கூடம் வந்து குறுகலான அறையொன்றினுள் நுழைந்தார்கள். மேசை மீதிருந்த கருவியொன்றில் எதையோ இயக்கினார் இராமபுத்திரன்.

பின் ''சரி! வாருங்கள் உள்ளே போகலாம்!'' என்றார். தலைவரின் அறை வந்தது. கண்ணாடிக் கதவு தெரிந்தது. கை வைத்தார். திறந்தது கதவு. உள்ளே தலையை நுழைத்தார் இராமபுத்திரன். அங்கே அவர் கண்ட காட்சி....!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுக்களில் யாழ். கல்வி வலயம் செம்பியன்

## தடகளப் போட்டிகளில் வலிகாமம் முன்னிலை

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வட மாகாண பாடசாலைகளுக்கிடையில் வருடாவருடம் நடைபெற்று வருகின்ற தடகள மற்றும் பெரு விளையாட்டு நிகழ்வுகள், 5 வருடங்களைக் கடந்து இம்முறை 6 ஆவது வருடமாக நடைபெற்று முடிந்துள்ளது.

கடந்த 4 ஆம் திகதி வியாழக்கிழமை தடகள போட்டி நிகழ்வுகள், வட மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகின.

கடந்த 5 வருடங்களாக பாடசாலை, கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் என்ற ரீதியிலேயே போட்டிகள் நடைபெற்று வந்தன. ஆனால், இம்முறை வலய மட்டம் வரையில் போட்டிகள் நடைபெற்று, அடுத்து நேரடியாக மாகாண மட்டப் போட்டிகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2010, 2011 ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகளில் வலிகாமம் கல்வி வலயம் அனைத்துப் போட்டிகளிலும் செம்பியனாகியிருந்ததுடன்,இறுதி வருடமான 2012 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்வி வலயம் செம்பியனாகியிருந்தது. ஆனால், இவ்வருடம் நடைபெற்ற போட்டிகளில் பெரு விளையாட்டுக்களில் யாழ்ப்பாண வலயம் முன்னிலை பெற்றதுடன், தடகள போட்டி நிகழ்வுகளில் வலிகாமம் கல்வி வலயம் முன்னிலை பெற்றிருந்தது.

இருப்பினும், அனைத்துப் போட்டிகளின் அடிப்படையில், 1056 புள்ளிகளைப் பெற்ற யாழ்ப்பாணக் கல்வி வலயம், அனைத்துப் போட்டிகளிலும் செம்பியனாகியதுடன், 921 புள்ளிகளைப் பெற்ற வலிகாமம் கல்வி வலயம் இரண்டாமிடத்தினையும் 416 புள்ளிகள் பெற்ற வடமராட்சி கல்வி வலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டன.

**அனைத்துப் போட்டிகளிலும் ஒவ்வொரு வலயமும் பெற்றுக்கொண்ட புள்ளிகள்**

| நிலை | வலயங்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 1056 |
| 02 | வலிகாமம் | 921 |
| 03 | வடமராட்சி | 416 |
| 04 | மன்னார் | 406 |
| 05 | வவுனியா தெற்கு | 271 |
| 06 | முல்லைத்தீவு | 241 |
| 07 | வவுனியா வடக்கு | 236 |
| 08 | கிளிநொச்சி | 200 |
| 09 | தென்மராட்சி | 135 |
| 10 | துணுக்காய் | 76 |
| 11 | தீவகம் | 52 |
| 12 | மடு | 47 |

இம்முறை நடைபெற்ற வட மாகாணப் போட்டிகளில், பெரு விளையாட்டுக்களில் யாழ்ப்பாண வலயம் 566 புள்ளிகளைப் பெற்று செம்பியனாகியதுடன், இரண்டாமிடத்தினை 412 புள்ளிகள் பெற்ற வலிகாமம் கல்வி வலயம் பெற்றுக்கொண்டது. மூன்றாமிடம் 315 புள்ளிகள் பெற்ற வடமராட்சி கல்வி வலயத்திற்குக் கிடைத்தது.

**பெரு விளையாட்டுக்களில் புள்ளிகள் பெற்றுக்கொண்ட அணிகள்**

| நிலை | வலயங்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 566 |
| 02 | வலிகாமம் | 412 |
| 03 | வடமராட்சி | 315 |
| 04 | வவுனியா தெற்கு | 133 |
| 05 | கிளிநொச்சி | 132 |
| 06 | முல்லைத்தீவு | 99 |
| 07 | வவுனியா வடக்கு | 95 |
| 08 | மன்னார் | 90 |
| 09 | தென்மராட்சி | 68 |
| 10 | தீவகம் | 27 |
| 11 | துணுக்காய் | 13 |
| 12 | மடு | 05 |

பெரு விளையாட்டுப் போட்டிகளில் யாழ்ப்பாண வலயத்தின் ஆதிக்கத்தினைத் தகர்த்த வலிகாமம் கல்வி வலயம் தடகள நிகழ்வுகளுக்கான போட்டிகளில் 509 புள்ளிகளைப் பெற்று செம்பியனாகியது.

தடகள நிகழ்வுகளில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் 490 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தினைப் பெற்றதுடன், 316 புள்ளிகள் பெற்ற மன்னார் மாவட்ட அணி மூன்றாமிடத்தினைப் பெற்றுக்கொண்டது. தடகள நிகழ்வுகளில் வட மாகாண வீரர்கள் தமது அதீத திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர். இதற்குச் சான்றாக யாழ்.துரையப்பா விளையாட்டரங்களில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில், கடந்த வருடங்களில் நிகழ்த்தப்பட்டிருந்த 89 சாதனைகள் வீர, வீராங்கனைகளினால் முறியடிக்கப்பட்டு இருக்கின்றன.

**தடகள நிகழ்வுகளில் வலயங்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகள்**

| நிலை | வலயங்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | வலிகாமம் | 509 |
| 02 | யாழ்ப்பாணம் | 490 |
| 03 | மன்னார் | 316 |
| 04 | முல்லைத்தீவு | 142 |
| 05 | வவுனியா வடக்கு | 141 |
| 06 | வவுனியா தெற்கு | 138 |
| 07 | வடமராட்சி | 101 |
| 08 | கிளிநொச்சி | 68 |
| 09 | தென்மராட்சி | 67 |
| 10 | துணுக்காய் | 63 |
| 11 | மடு | 42 |
| 12 | தீவகம் | 25 |



அனைத்துப் போட்டிகளிலும் செம்பியனாகிய யாழ்ப்பாணக் கல்வி வலயம்



அனைத்துப் போட்டிகளிலும் இரண்டாம் இடத்தைப் பெற்ற வலிகாமம் கல்வி வலயம்



தடகளப் போட்டிகளில் செம்பியனாகிய வலிகாமம் கல்வி வலய அணி

பெரு விளையாட்டுக்களில் பின்னடைவைச் சந்தித்த மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அணிகள் தடகள நிகழ்வுகளில் முன்னேற்றத்தை காட்டியிருந்தன.

இறுதி நாள் போட்டிகளின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்டர் அலன்ரீன் அவர்களினால் போட்டிகளில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகள் மற்றும் அணிகளுக்குமான பரிசில்கள் வழங்கப்பட்டன.

**கு.சுரேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நண்பர்களுடன் கலந்துரையாடல்களை நடத்துங்கள்

# பரீட்சைகளைப் பதற்

**'கல்வி' என்பது பிள்ளைகள் தமது வாழ்வில் பெறத்தக்க இணையற்ற செல்வமாகும். கல்வி கற்று, வாழ்வில் சிறந்த இலக்குகளை அடைய எண்ணுபவர்களுக்கான சவாலாக அமைவது பரீட்சைகளாகும். பரீட்சைகளில் சித்திபெற வேண்டுமாயின், முறையான கற்றலும் தயார் நிலைகளும் அவசியமாகும். இவை இல்லாவிட்டால், பதற்றம், பீதி என்பன காரணமாக சித்தி பெறத் தவறிவிடவும் கூடும்.**

பரீட்சைக் காலங்கள் என்பது மாணவர்களால் தவிர்க்கப்பட முடியாத காலப்பகுதியாகும். பாடசாலையின் கலைச் செயற்பாடுகள், விளையாட்டுக்கள் அனைத்திலிருந்தும் விடுபட்டுப் படிப்பு மட்டுமே குறியாகக்கொண்டு செயலாற்றும் காலப்பகுதியும் இதுவாகும். உயர்தர, சாதாரண தரப் பரீட்சைகள் உட்பட, எந்தவொரு பரீட்சையாக இருந்தாலும், மாணவர்கள் நேரத்தை வீணடிக்காமல் பயன்களைப் பெறுவது அவசியமாகும். நேரத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவதனூடாக, உயரிய பயன்களைப் பெறமுடியும். அத்துடன், உரிய முன்னேற்பாடுகளுடன் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதும் பாடங்களைப் படிப்பதும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தரும்.

## சிறு குறிப்புகள்


பாடசாலையிலும் மேலதிக வகுப்புகளிலும் உங்களுக்குப் பல பாடங்கள் சம்பந்தப்பட்ட குறிப்புகள் கிடைக்கும். இவற்றைச் சிறுகுறிப்புகளாகத் தொகுத்து- எழுதி வைத்துக்கொள்வது உங்களுக்கு பயன் அளிப்பதாக அமையும்.

## நேர அட்டவணை தயாரியுங்கள்

நீங்கள் இதுவரை பயன்படுத்தி வந்த நேர அட்ட வணையைத் தவிர, பரீட்சைத் தினங்களைக் கருத்திற்கொண்டு அதற்கென்றே, பிரத்தியேகமான நேர அட்டவணை யொன்றைத் தயாரித்துக்கொள் ளுங்கள். நேர அட்டவணை யைத் தயாரிக்கும் போது முக்கிய மாக இரண்டு விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும். அதாவது, ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் நீங்கள் கொண்டிருக்கும் திறமை மற்றும் பாடப்பரப்பு என்பன குறித்துக் கவனத்தில்கொள்ள வேண்டும். உங்களுக்குக் கடினமான பாடங்கள் இருப்பின், அவற்றுக்கு அதிக நேரத்தினை ஒதுக்குங்கள்.

அத்துடன், பாடசாலை முடிவடைந்து வீடு திரும்பிய நேரம் முதல் அடுத்த நாள் பாடசாலை செல்லும் நேரம் வரையிலான உங்கள் செயற்பாடுகளை அந்த நேர அட்டவணையில் குறித்துக்கொள்ளுங்கள். இந்த நேர அட்டவணை யில் வாரத்தின் ஏழு நாட்களையும் உள்ளடக்குவது அவசியமாகும்.





குறுகிய நேரத்தையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்

## உறக்கம் அவசியம்

உறக்கத்திற்கென ஆகக்குறைந்தது 5 மணித்தியாலங்களையாவது ஒதுக்குவது அவசியமாகும். கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு உளவியல் மற்றும் உடல் ஓய்வு என்பன அவசியமாகும். ஆக, உறக்கத்தின் மூலமே உடலுக் கும் உள்ளத்துக்கும் ஓய்வு கிடைக்கின்றது. அத்துடன், மேற்குறிப்பிட்ட நேர அட்டவணைக்கு ஏற்ப நீங்கள் செயலாற்றும்போது, உங்க ளுக்கு நித்திரை ஏற்பட்டால், ஆகக்குறைந்தது 5 நிமிடங்களா வது ஓய்வு எடுங்கள் அல்லது படிக்கும் இடத்தை/ அமரும் இடத்தை மாற்றுதல், தேநீர் அருந்துதல், வீட்டுத்தோட்டத் திலுள்ள மரத்தின்கீழ் அமர்ந்து படித்தல் போன்ற வழிமுறை களைப் பின்பற்றுங்கள். இவ்வாறு செய்யும்போது நித்திரைத் தன்மை நீங்கி உற்சாகம் ஏற்படும்.



# கடவுளின்

அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் குழுவொன்றினால் அபூர்வமான ஏரியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஏரியானது, கடந்த காலங்களில் எந்தவொரு காலநிலை மாற்றங்களின் தாக்கத்திற்கும் உள்ளாகாத நிலையில் காணப்படுவதோடு, அது மனிதர்களினால் மாசடைதலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவுமில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதிலுள்ள நீரானது, மிகவும் தெளிந்த நிலையில் உள்ளது. அதுமட்டுமன்றி, சுமார் 7,500 வருடங் களுக்கு முன்னர் இருந்த அதே சுத்தம், சுகாதாரத்துட னேயே இப்போதும் இந்த ஏரி காணப்படுவதாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றமின்றி எதிர்கொள்ள...






## உணவு உட்கொள்வது அவசியம்

கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் உங்களுக்குப் போஷாக்கான உணவுகள் அத்தியாவசியமாகும். உரிய நேரத்தில் சரியான போஷாக்கு உணவினை உட்கொள்வதனூடாக, அசௌகரியங்களற்ற கல்விச் செயற்பாடுகளில் உங்களால் ஈடுபட முடியும். உணவில் அக்கறையின்றி, கற்றல் நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபடும்போது, பரீட்சைகளை அண்மித்த நாட்களில் சுகவீனமடையக்கூடிய நிலைமை ஏற்படலாம். அத்துடன், உரிய நேரத்தில் உணவு உட்கொள்ளாமல் இருந்தால் உடல் பலவீனமடையும். இதனால், இலகுவில் நோய்கள் தொற்றவும் கூடும். மேலும், கற்றவற்றை நினைவிற்கொள்வதும் சிரமமானதாக இருக்கும்.

## குறுகிய நேரத்தையும் வீணாக்காதீர்கள்

பாடசாலையில் ஒரு பாடம் முடிவடைந்து, அடுத்த பாடத்திற்கு ஆசிரியர் வகுப்புக்கு வரும்வரை இருக்கும் குறுகிய நேரத்தையும் வீணாகக் கழிக்காமல், அந்த நேரத்தை சிறுகுறிப்புகளை வாசிப்பதற்காகவும் பாடம் சம்பந்தப்பட்ட சந்தேகங்களை நண்பர்களிடம் இருந்து நிவர்த்தி செய்துகொள்வதற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாம். விஞ்ஞானப் பெயர்கள், ரசாயன அட்டவணைகள் என்பனவற்றை சிறிய அட்டைகளில் எழுதிப் புத்தகப்பைகளில் வைத்துக்கொள்வதன்மூலம் நீங்கள் எங்கு சென்றாலும் அவற்றை எடுத்துச் செல்லமுடியும். பஸ் வண்டியில் பயணம் செய்யும்போது, இறங்கவேண்டிய இடம் வரும்வரை அந்த அட்டைகளை எடுத்து மீட்டிப் பார்க்க முடியும்.

## பரீட்சைப் பீதியைப் போக்கிக் கொள்ளுங்கள்

"பரீட்சை வினாக்கள் கடினமானதாக இருக்குமோ!", "என்னால் விடையளிக்க இயலுமாக இருக்குமோ!" போன்ற மறைமுக எண்ணங்களை வளர்த்துக்கொள்ளக் கூடாது. மாறாக, பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று நீங்கள் உறுதி கொண்டீர்களானால், உங்களால் நிச்சயம் பரீட்சையில் வெற்றியை அடைய முடியும்.

பரீட்சைப் பீதியைப் போக்கிக்கொள்ள கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் மாதிரி வினாத்தாள்களை செய்து பார்ப்பது சிறந்தது. அந்த வினாத்தாள் களுக்கு நீங்கள் எழுதியுள்ள விடைகளை நன்கு படித்து மனதில் பதித்துக் கொள்ளுங்கள். இதனால், உங்களுக்கு நல்ல கிரகிப்பு ஆற்றலும் ஏற்படும். அத்துடன், பரீட்சையினை சிறந்த முறையில் எதிர்கொள்வதற்கான மனப்பக்குவமும் உங்களுக்கு ஏற்படும். மேலும், வினாத்தாள்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தினுள் விடைகளை எழுதுவதும் அவசியமாகும். இதன்போது, உங்களுக்குக் கடினமாக இருக்கும் பாடம் எது?, கூடிய கவனம் செலுத்த வேண்டிய பாடப்பகுதி எது?, நேரத்தை எவ்வாறு முகாமைத்துவம் செய்யலாம்? போன்ற விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்த முடியும்.

## கலந்துரையாடல்களை நடத்துங்கள்

வாரத்திற்கு ஒரு முறையாவது உங்கள் நண்பர்களுடன் இணைந்து பாடங்கள் பற்றிய கலந்துரையாடல்களை நடத்துங்கள். இதனால், படிக்கத் தவறிய பாடப்பகுதிகள் பற்றி ஓரளவு புரிந்துணர்வு உங்களுக்கு ஏற்படும். அதன்பின்னர் தவறவிடப்பட்ட விடயங்களை மீண்டும் தயார்படுத்திப் பரீட்சைகளை எதிர்கொள்ளத் தயாராக முடியும். நீங்கள் பரீட்சைக்குத் தயாராகும்போது, மேற்கூறிய விடயங்களைக் கவனத்திற்கொள்வதனூடாக, நேரத்தை வீணடிக்காமல் உரிய பயன்களைப் பெற முடியும். அத்துடன், பரீட்சைகளைத் திறம்பட எதிர்கொள்ளமுடியும் என்ற உறுதியான எண்ணத்துடனும் நம்பிக்கையுடனும் எப்போதும் இருங்கள். அதற்கான முயற்சிகளில் ஈடுபடுங்கள். உங்களது முயற்சிகள் நிச்சயம் திருவினையாகும்.

-கவிதா

# குளியல் தடாகம்



தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஏரியினை 'கடவுளின் குளியல் தடாகம்' என்று பெயரிட்டால் பொருத்தமாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும், இந்தக் கண்டுபிடிப்பினையடுத்து இந்த ஏரிக்கு 'ப்ளூ லேக்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்திலுள்ள 'ஸ்ட்ராட்ப்ரோக்' என்ற தீவுப்பகுதியிலேயே இந்த ஏரி அமையப்பெற்றுள்ளது. அப்பகுதியில் காணப்படுகின்ற பாரிய ஏரிகளுள் இதுவும் ஒன்றாகும். இதிலுள்ள நீரானது, எந்தளவுக்கு சுத்தமாகவும் தெளிந்ததாகவும் உள்ளதென்பதைக் கூறுவதென்றால், இந்த ஏரியினை எட்டிப் பார்த்தால், அதன் 30 அடி ஆழத்தின் அடிப்பகுதி வரை தெளிவாக காணக்கூடியதாக உள்ளது.

இந்த ஏரி தொடர்பாக வெளி உலகிற்கு அறியப்படுத்துவதற்கு முன்னர், நீண்டகாலமாக இதனையிட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், தற்போதும் இது தொடர்பான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - I


பெயர்: ..............................................................................

கீழ்க் காணும் எல்லா வினாக்களினதும் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.


✱ வித்தியாசமான உருவின் கீழ்க் கீறிடுக.

01. 
i. ii. iii.

02. 
i. ii. iii.

03. 
i. ii. iii.

04. உருவிலுள்ள இடைவெளியை நிரப்பக்கூடிய சரியான வடிவம் எது?


i. ii. iii.

05. ஒரு டசின் மாம்பழங்களின் விலை ரூபா 144.00. எனின், 2 மாம்பழங்களின் விலை யாது?

i. ரூ.12.00 ii. ரூ.24.00 iii. ரூ.12.50

06. கனவுரு ஒன்றை அமைக்கத் தேவையான மிகக் குறைந்த சதுரங்களின் எண்ணிக்கை யாது?

i. ஆறு ii. நான்கு iii. இரண்டு

07. ஒரு பூந்தோட்டத்தில் எப்போதும் இருப்பவை?

i. பூக்கள் ii. மரங்கள் iii. பறவைகள்

08. BAT என்பதை | 4 | 3 | 5 | என எழுதினால், TAP என்பதை காட்டும் வரிசை எது?

i. | 4 | 3 | 1 | ii. | 4 | 5 | 3 | iii. | 5 | 3 | 1 |

09.  இவ்வுருவின் வளைந்த மேற்பரப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு?

i. 2 ii. 1 iii. 3

10. XV, XVI, XVII, ........... இவ் இடைவெளியில் வரவேண்டிய உரோமன் இலக்கம் எது?

i. XIV ii. XX ii. XVIII

11. ▭ இச்செவ்வகத்தின் நீளம் 5cm, அகலம் 3cm எனின், இச்செவ்வகத்தின் சுற்றளவு எது?

i. 15cm ii. 8cm iii. 16cm

12. கமலாவின் வயது, அவளது தங்கையின் வயதைப் போன்று இரண்டு மடங்காகும். இன்னும் 5 வருடங்களில் தங்கையின் வயது 10 ஆகும். அப்போது கமலாவின் வயது யாது?

i. 15 ii. 20 iii. 30

13.  இக்கடிகாரம் காட்டும் நேரம் யாது?

i. 3.30 i. 4.30 iii. 3.35




14. 1kg திராட்சையின் விலை ரூபா.140 எனின், 750kg திராட்சையின் விலை யாது?

i. ரூ.70.00 ii. ரூ.105.00 iii. ரூ.35.00

15. ▭▭▭▭▭ இக்காகிதத் தாளின் கட்டம் ஒன்றின் நீளம் 5cm எனின், முழுத் தாளின் நீளம் யாது?

i. 20cm ii. 5cm iii. 10cm

16. $\frac{3}{4} + \frac{1}{4}$ ....... இவ் இடைவெளியில் வரவேண்டிய சரியான விடை என்ன?

i. $\frac{2}{4}$ ii. 1 iii. $\frac{1}{4}$

**மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்**

### பகுதி - II விடைகள்

(ஜூலை 03ஆம், 10 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

01. தோமஸ் அல்வா எடிசன்
02. ஊக்கமும், விடாமுயற்சியும்
03. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்
04. தொடர்ந்து முயற்சி செய்தமை/விடாமுயற்சி
05. முயற்சி திருவினையாக்கும்
06. முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்
07. வீடுகள், விளக்கு
08. 1) சித்தி 2) இல்லம்/மனை
09. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு/ அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
10. உண்மையை மறைத்தல்/ மறைக்க முயல்தல்
11. 1) தாலாட்டுப் பாட்டு 2) வைர விழா 3) பேத்தை/குஞ்சு
12. 1) நாங்கள் வீட்டுக்கு போவோமா?
    2) நான் இன்று வீட்டுக்கு வருவேன்.
    3) நான் வெளியே போகலாமா?
13. 1) Please sit down 2) Please come in 3) Can you sing?
14. 1) எவில்லா வாடிவென்ன. 2) சிந்து கியன்ன.
15. 1) சித்தி 2) ஓடியது
16. குப்பைமேனி
17. முஸ்லிம்கள்

| | |
|---|---|
| 18. 3 | 29. 4 |
| 19. 3 | 30. 1 |
| 20. 3 | 31. 4 |
| 21. 3 | 32. 4 |
| 22. 4 | 33. 4 |
| 23. 1 | 34. 1 |
| 24. 2 | 35. 3 |
| 25. 4 | 36. 40,730 |
| 26. 4 | 37. 510, 560, 610 |
| 27. 2 | 38. $\frac{3}{6}$ |
| 28. 3 | 39. $\frac{1}{8}$ |

40. $\frac{7}{8}$
41. i) 14:10, 14 மணித்தியாலம் 10 நிமிடங்கள்
    ii) 7 மணித்தியாலம் 10 நிமிடங்கள்
    iii) 35 நிமிடங்கள்
42. 12, 8, 6
43. BC 5m 30cm CA 5m 30cm
44. 750ml
45. A - இலங்கை B - மாகாணம் C - மாவட்டம் D - நகரம்
46. i. 2 ii. மஞ்சள் iii. 6 iv. 27 பிள்ளைகள் v. 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி கற்கும்போது ஏற்படும் இடையூறுகளைத் தவிர்த்தல்





'இடையூறுகள்' என்பது நாம் செய்யும் காரியங்களை வினைத்திறனுடன் செய்ய விடாமல் இருக்கும் தடைகளாகும். தடைகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால், அதனைக் குறைத்துக்கொள்ளவும் முன்னெச்சரிக்கையாக இருக்கவும் முடியும். மாணவர்களைப் பொறுத்தவரையில், கற்றலில் ஈடுபடும் காலத்தில் பல்வேறு இடையூறுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும்.

இடையூறுகள் நிலவும் போது கற்றலைச் சிறப்புற மேற்கொள்வது சிரமமாகும். ஆகவே, இடையூறுகளைத் தவிர்த்த பின்னரே, கற்றலை ஆரம்பிக்க வேண்டும். அதுவே வினைத்திறனான, ஒழுங்கான கற்றலுக்கு வழிவகுக்கும். மாணவர்கள் பெரும்பாலும், தமது வீடுகளில் அல்லது பாடசாலையிலேயே இடையூறுகளுக்கு ஆளாகின்றனர். இதனால், எத்தனையோ மாணவர்கள் கல்வி கற்க விருப்பம் இருந்தும், தாம் எதிர்கொள்ளும் இடையூறுகள் காரணமாக கல்வியில் பின்தங்கி விடுகின்றனர்.

மேலும், இடையூறுகளோடு கற்க ஆரம்பிக்கும் போது, கற்றலில் விரக்தி, பயம்,ஈடுபாடு இல்லாத தன்மை என்பனவும் ஏற்படக் கூடும். அது அம்மாணவர்களின் உள்ளத்தையும் பாதித்துக் கற்றலையும் சீர்குலைத்து விடும்.





ஆகவே, மாணவர்களுக்கு ஏற்படும் இடையூறுகள் யாவற்றுக்கும் உடனடியாகத் தீர்வோ, முடிவோ கிடைக்கப் பெற வேண்டும்.


அதற்குப் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் ஆலோசனைகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

அதேவேளை, மாணவர்களும் கற்றலில் தங்களுக்கு இடையூறுகள், தடைகள் உண்டெனக் கருதும் பட்சத்தில் அவை குறித்துத் தமது பெற்றோர்களிடமோ அல்லது ஆசிரியர்களிடமோ கூறி, ஆலோசனைகளைப் பெற வேண்டும். இவ்வாறு செய்வதன்மூலம் கற்றலின் பயனையும் சிறப்பையும் முழுமையாக அனுபவிக்கக் கூடியதாக இருக்கும்.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# சிறிய நட்சத்திர மண்டலம் கண்டுபிடிப்பு!





விண்வெளியில் ஓர் அபூர்வ, சிறிய நட்சத்திர மண்டலத்தை விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் சிலர் கண்டுபிடித்துள்ளனர். இந்தச் சிறிய நட்சத்திர மண்டலம், சுமார் ஆயிரம் நட்சத்திரங்களை உள்ளடக்கியிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

விண்வெளியில் சிறிய நட்சத்திர மண்டலங்கள் இருப்பதாக முன்பிருந்தே கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. அவற்றைக் கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரதிபலனாகவே இந்தச் சிறிய நட்சத்திர மண்டலம் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நட்சத்திர மண்டலத்திற்கு 'சேகு -2' என்று பெயரிடப்பட்டுள்ளது. அமெரிக்க-ஹவாய் தீவின் வி.எம்.கெக் ஆய்வுகூடத்தில் பொருத்தப்பட்டுள்ள நவீன தொலைக்காட்டி ஒன்றின் மூலமே இந்தச் சிறிய நட்சத்திர மண்டலம் கண்டறியப்பட்டுள்ளது.

# விண்வெளி வீரர்களுக்கான புதிய உடை அறிமுகம்



அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு நிலையமானது, விண்வெளி வீரர்களுக்கென்று புதிய விண்வெளி உடைகளை அறிமுகப்படுத்தவுள்ளது.

உலகில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை உட்புகுத்தி, காலத்திற்குக் காலம் விண்வெளி வீரர்களுக்கென உடைகள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வரிசையிலேயே இந்த உடைகளையும் நாஸா அறிமுகப்படுத்தவுள்ளது.














விண்வெளி உடைகளை வடிவமைத்து - அவற்றைப் பரீட்சித்துப் பார்க்கும் அமெரிக்க நிறுவனமான Final Frontier Design எனும் நிறுவனத்திடமே இந்த உடைகளை வடிவமைப்பதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய உடைகள் விண்வெளி வீரர்களுக்கு அதிக சௌகரியத்தை அளிக்கக்கூடியதாகவும் அதிக பாதுகாப்பினை அளிக்கக்கூடியதாகவும் இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் முறைகள்

இன்று மாணவர்கள் கற்பதற்குப் பல்வேறு கற்பித்தல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. எப்பொழுது எந்தக் கற்பித்தல் முறையைப் பயன்படுத்தல் வேண்டும்? எனத் தீர்மானிப்பதற்கு, குறிப்பிட்ட பாடவேளையில் மாணவர்கள் எத்தகைய விடயங்களை விளங்கிக்கொள்ள வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கின்றது. ஒரே விதமான கற்பித்தல் முறையைப் பயன்படுத்தி அனைத்துப் பாடங்களையும் விளக்கிவிட முடியாது. வகுப்பறையில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் கற்பித்தல் முறை மனக்கற்றலை ஊக்குவிப்பதாக உள்ளது. மனனஞ் செய்வதன் மூலம் மனதில் பதிய வைப்பதற்கான வழிமுறை ஊக்குவிக்கப்படுகின்றது. பாடங்களில் உள்ள விடயங்கள் அப்படியே எடுத்துக் கூறப்படுகின்றன. மனனஞ் செய்வது முக்கியமானதொரு விடயமாகத் தற்காலக் கல்வி முறையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதனால், மாணவர்களுக்குப் புத்தாக்க திறன்கள் விருத்தியாவதில்லை.






இன்றைய வகுப்பறைகளில் அவசியம் தேவைப்படும் கற்பித்தல் முறைகளில் ஒன்று, வழிகாட்டப்பட்ட பிரச்சினை தீர்த்தல் முறையாகும். Guided problem-solving எனப்படும் இக்கற்பித்தல் முறையானது, பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மாணவர்களுக்கு உரிய திறன்களை அடைவதற்கு உதவுகின்றது. படித்த பாடங்களை நன்றாகக் கிரகித்து அதில் வரும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு மாணவர்களுக்கு உதவியாக அமைகிறது. கணிதம் போன்ற பாடங்களைக் கற்பதற்கு இம்முறையைப் பயன்படுத்தலாம்.

இரண்டாவது முறையாக ஆய்ந்தறிதல் கற்பித்தல் முறையாகும். Diagnostic Teaching எனப்படும் கற்பித்தல் முறை பற்றியும் பெரிதும் வலியுறுத்தப்படுகின்றது. இந்தக் கற்பித்தலானது, மாணவர்களுக்குப் பாடங்கள் தொடர்பான பிரச்சினைகளை முன்வைப்பதுடன் ஆரம்பிக்கின்றது. எந்தவொரு முறையைப் பயன்படுத்தியேனும் இப்பிரச்சினையைத் தீர்க்கலாம். குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றிய எந்தவித விளக்கமோ அல்லது விரிவுடைகளோ இன்றி மாணவர்களுக்குப் போதிய நேரம் வழங்கி அதனைத் தீர்க்க நேரம் கொடுத்து மாணவர்களின் சிந்தனைக் கதவை இம்முறையினூடாகத் திறக்க முடியும்.

**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
**PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)**

Dialog தொலைபேசியில் ஆங்கிலம் மூலம் SMS ஊடாக

* தினமும் அரச மற்றும் தனியார் துறை வேலை வாய்ப்புகள், IT Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்).
* ஆங்கில Proverb, Idiom மற்றும் Quote களை தினம் பெறலாம்.
* முக்கிய செய்திகள், பொது அறிவு மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் என இன்னும் பல்வேறுபட்ட விடயங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்




# விஜய் மாணவர் கழகம்



அங். இல: 5236

ஆர்.எஃப்.சப்றானா,
ஆர்.எம். நகர்,
பொத்துவில்.



அங். இல: 5237

அப்துல் மலிக்,
வெயாங்கல்ல,
அகலவத்த.



அங். இல: 5238

ஏ.எம்.அஸ்தக்,
ஹனிபா வீதி,
கல்முனை-06.



அங். இல: 5239

எஸ்.எம்.சிமாஸ்,
கல்பிட்டி வீதி,
நுரைச்சோலை.



அங். இல: 5240

எம்.ஹனிஃப் இஷாம்,
ஜும்மா பள்ளிவீதி,
நிந்தவூர்-15.



அங். இல: 5241

ஜே.தர்மிகா,
புதிய மூர் வீதி,
மன்னார்.



அங். இல:5242

ம.திருசியா,
பரிகாரிகண்டல்,
முருங்கன்.



அங். இல: 5243

ஐ.எம்.இன்சாஃப்,
எழுவில,
பாணந்துறை.



அங். இல: 5244

மோ.கொலின்ஸ்,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.



அங். இல: 5245

ஜெ.கிருஷான் கோகுல்,
எலதுவ தோட்டம்,
மத்துகம.



அங். இல: 5246

ஆர்.விஷ்வா,
சங்கானை மேற்கு,
சங்கானை.



அங். இல: 5247

எஸ்.சிவராயன்,
பொன்னகர்,
முள்ளியவளை.

# தெரிந்து கொள்வோம்

* சுதந்திர இலங்கையின் அமைச்சரவை அந்தஸ்துள்ள முதலாவது கல்வித்துறை அமைச்சர் யார்?
  ஈ.எ.நுகவெல






* ஈரான் நாடு தனக்குச் சொந்தமான நீரிணையில் மேற்கொள்ளப்பட்டு வரும் போக்குவரத்தை மூடிவிடுவதாக அடிக்கடி கூறுகின்றது. அது எந்த நீரிணையைக் குறிக்கின்றது?
  ஹோர்மூஸ் நீரிணை - பாரசீகக்குடா
* இலங்கையின் 13 ஆவது அரசியல் திருத்தம் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உருவாக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவின் 13 ஆவது யாப்பு எதற்காக திருத்தப்பட்டது?
  இது அமெரிக்காவில் கறுப்பின மக்களின் அடிமை ஒழிப்புச் சட்டமாகும். 1865 இல் நிறைவேற்றப்பட்டது.
* இலங்கையில் ஆகக்கூடிய பிரதேச செயலகங்களைக்கொண்ட மாகாணங்கள் எவை?
  1. மேல் மாகாணம் - கொழும்பு மாவட்டம் - 48
  2. வடமேல் மாகாணம் - குருநாகல் மாவட்டம் - 46
  3. வடமத்திய மாகாணம் - அநுராதபுரம் மாவட்டம் - 49





* உலக சனத்தொகை 7 பில்லியனைத் தாண்டியுள்ளது. ஆசியக் கண்டத்திலேயே ஆகக்கூடிய சனத்தொகை காணப்படுகின்றது. இதற்கு அடுத்ததாக சனத்தொகை அதிகமுள்ள கண்டம் எது?
  ஆபிரிக்காக் கண்டம் - 1.033 பில்லியன்

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**



# விஜய் மாணவர் கழகம்

படத்தை இங்கே ஒட்டவும்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..............................................

முகவரி: ..............................................

..............................................

பாடசாலை: ..............................................

வகுப்பு: ..............................................

திகதி: ..............................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Facebook இல் பதில் இடுகைகளுடன் படங்களையும் இணைக்கும் வசதி அறிமுகம்

Facebook இல் ஒருவர் இடும் பதிவிற்கு பதில் அல்லது கருத்து எழுதுவது பலருக்கும் விருப்பமான விடயமாக உள்ளது. அதிலும் புகைப்படத்துடன் பதில் எழுத இயலும் என்றால் கேட்கவும் வேண்டுமா?

இனிவரும் காலங்களில் Facebook இல் ஒருவர் பகிரும் தகவல் அல்லது விடயங்களுக்குப் பதிலிடும்போது, அதனைப் படங்களுடனும் வழங்கக்கூடிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், Facebook இன் இந்த வசதியானது, இணையத்தளத்திற்கு மட்டுமே தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. Mobile Application இல் இவ்வசதி தற்போதைக்கு இல்லையென Facebook தெரிவித்துள்ளது.ஆனால், Mobile Application இல் பதிலிடுகைகளுடன்கூடிய படத்தை பயனாளர்கள் பார்க்க முடியும். அவர்களால் படத்துடன்கூடிய பதிலிடுகைகளைப் பதிவிட முடியாது.






இந்தப் புதிய வசதியானது, இளைஞர்களை வெகுவாகக் கவரும் என Facebook நம்பிக்கை தெரிவித்துள்ளது. அந்த நம்பிக்கையை மெய்ப்பிக்கும் வகையில், தற்போதளவில் Facebook இல் பதிலிடுகையில், படங்களை இணைப்பது என்பது பரவலாக இடம்பெறும் ஒரு விடயமாக மாறிவருகின்றது.



இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஜூலை மாதம் 17 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---



எஸ்.பிரதீப்

# கணினி மவுஸ் கண்டுபிடிப்பாளர் காலமானார்....



கணினியில் பல்வேறு வேலைகளைச் செய்திட உதவிடும் 'மவுஸ்' (சுட்டி-mouse) இனை உலகுக்கு அறிமுகப் படுத்திய டக்ளஸ் கார்ல் எங்கல்பார்ட், இம்மாதம் (ஜூலை) 2ஆம் திகதி, தனது 88 ஆவது வயதில் காலமானார்.

இவர், 1925 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி அமெரிக்காவின் ஒரேகான் மாநிலத்திலுள்ள போர்ட்லண்டில் பிறந்தார்.

அன்றைய காலத்தில் தொடர்பாடல்களை தொழில்நுட்பம் மூலம் எளிமைப்படுத்த வேண்டும் என்று எண்ணிய இவர், அதற்காக பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டார். அதற்கமைய, 1968 ஆம் ஆண்டு சென். பிரான்ஸிஸ்கோவில் மிகப் பெரிய தொழில்நுட்ப செயல்விளக்கம் ஒன்றை அவர் நிகழ்த்தினார். இதன்போதே மவுஸின் செயற்பாடுகளை டக்ளஸ் எங்கல்பார்ட் விளக்கினார். அதுமட்டுமன்றி, முதன் முதலாக வீடியோ கொன்ஃபரன்ஸ் முறை பற்றி செயல் விளக்கத்தையும் காட்டினார்.







எழுத்துகள் மூலம் இணையப்பக்கங்களை ஒன்றிணைப்பது குறித்த தொழில் நுட்பத்தையும் அப்போது அவர் விளக்கினார். அந்த வகையில், இவரைச் சிறந்த கண்டுபிடிப்பாளர் என்றும் கூறலாம். மவுஸ் உட்பட, 21 புதிய கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமை இவர் வசம் இருந்தது. டக்ளஸ் எங்கல்பார்ட் அறிமுகப்படுத்திய மவுஸ், ஆரம்ப காலத்தில் ஒரு மரப்பெட்டியில் பெரிய சக்கரங்களோடு இருந்தது.

சிறுநீரக பாதிப்புக்குள்ளாகியிருந்த இவர், கடந்த 2 ஆம் திகதி கலிஃபோர்னியாவில் உள்ள அவரது வீட்டில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வெட்டவும்




# சமூக வலைத் தளங்களில் வலம்வரும் சிரிப்பு மனிதரைத் தெரியுமா?



நீங்கள் ஒரு Facebook பாவனையாளராக இருந்தால், இங்கேயுள்ள உருவத்தை அடிக்கடி Facebook இல் கண்டிருப்பீர்கள். அப்போதெல்லாம் 'யார் இவர்?' என்ற சிந்தனை உங்கள் மனதுக்குள் ஓடியிருக்கும்.

'Yao Ming' எனும் பெயருடைய இவர், சீனாவைச் சேர்ந்தவர். கூடைப்பந்தாட்டத்தில் அதிக ஆர்வம்கொண்ட இவர், சீனாவின் சார்பில் சர்வதேச கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றி பதக்கங்கள் பல வென்றுள்ளார். இதன்மூலம் பெருமளவு பணமும் புகழும் சம்பாதித்துவிட்ட நிலையில், உபாதைகள் காரணமாக தற்பொழுது போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டார்.




இவரது உயரம் 7 அடி 6 அங்குலம் என்பது குறிப்பிடத்தக்கது. சீனாவின் மிகப் பிரபலமான விளையாட்டு நட்சத்திரங்களுள் ஒருவராக இவர் விளங்கியதுடன், 2003-2009 இற்கு இடையிலான 6 வருட காலப்பகுதியில் 5 கோடி அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெற்றிருக்கிறார்.

அது சரி.... இவருக்கும் சமூக வலைத்தளங்களுக்கும் என்ன தொடர்பு என்று நீங்கள் யோசிக்கிறீர்களா? அதாவது, 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற கூடைப்பந்தாட்ட போட்டியின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், சக வீரர் Ron Artest சகிதம் Yao Ming கலந்துகொண்டார். அப்போது Ron Artest பேசிய சில விடயங்களைக் கேட்டு அடக்கமுடியாமல் சிரித்தார் Yao Ming. அந்தக் காட்சி அடங்கிய வீடியோ இணையத்தளங்களிலும் வெளியாகி பிரபலமாகியது.

2010 ஜூலை 11 ஆம் திகதி Reddit சமூக வலைதளத்தில், Christopher Poole என்பவர் பல்வேறு வேடிக்கை ஓவியங்களை வரைந்து வெளியிட்டார். அதில் Yao Ming இன் சிரிக்கும் ஓவியமும் ஒன்றாகும். செய்தியாளர் சந்திப்பொன்றில் Yao Ming சிரித்த காட்சியின் Screen Shot ஐ அடிப்படையாக வைத்தே அந்த ஓவியத்தை வரைந்ததாக Christopher Poole தெரிவித்திருந்தார். அந்த ஓவியத்தின் வேடிக்கையான சிரிப்பு பலரையும் கவர்ந்திருந்தது. Yao Ming இன்று சிரிப்பு மனிதராக சமூக வலைதளங்களில் வலம்வருவதன் ரகசியம் இதுதான்!



# மின்சாரம் துண்டிக்கப்பட்டாலும் Smartphone களை சார்ஜ் செய்திடலாம்!




எதிர்வரும் காலங்களில் மின்சாரம் துண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களில் கூட Smartphone களை சார்ஜ் செய்யக்கூடிய வகையில் சார்ஜர் ஒன்று அறிமுகமாகியுள்ளது. இது 'SOS Charger' என அழைக்கப்படுகின்றது.

எளிமையான முறையில் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடியதாகக் காணப்படும் இந்த நவீன சாஜரானது, 1500mAh மின்னோட்டத்தினை வெளிவிடுகின்றது. இதில் 3 தொடக்கம் 5 நிமிடங்கள் வரை Smartphone ஐ சார்ஜ் செய்த பின்னர், 5 தொடக்கம் 12 நிமிடங்கள் வரை அழைப்புக்களை தொடர்ச்சியாக ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

மேலும், இந்த சார்ஜரையும் Smartphone ஐயும் இணைப்பதற்காக USB இணைப்பி காணப்படுவதுடன், சார்ஜ் செய்யப்படும் அளவுகளை அறிந்துகொள்வதற்கென LED மின்குமிழ்களும் பொருத்தப்பட்டுள்ளன. இதன் பெறுமதி 35 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

# உலகின் முதலாவது மடிக்கணினி 'Toshiba T1100'





இன்று மடிக்கணினிகளில் எத்தனையோ நவீன வடிவங்கள் வந்துவிட்டன. இன்னும் அதிநவீன வடிவங்கள் விரைவில் அறிமுகமாகவும் இருக்கின்றன. இந்நிலையில், இவற்றின் ஆரம்பநிலையான உலகின் முதலாவது மடிக்கணினி பற்றித் தெரியுமா? அதுதான் 'Toshiba T1100' ஆகும். இது 1985 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் RAM 256 KB, Processor 80C88 Intel 4.77 MHz, இயங்குதளம் MS-DOS 2.11 ஆகவும் இருந்தன. பிரதான நினைவகமானது Hard Disk ஆக இல்லாமல் 720 KB floppy drive ஆக இருந்தது. இதன் எடை 4.1 KG ஆகும்.

அன்று இதன் விலை 1,899 டொலர்களாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வெட்டவும்



# Samsung Galaxy Tab 3

Samsung நிறுவனமானது, 10.1 அங்குல அளவிலான திரையினைக்கொண்ட 'Samsung Galaxy Tab 3' இனை அறிமுகப்படுத்தியிருக்கின்றது.

Android 4.2 இயங்குதளத்தில் இயங்கும் இது, Dual core 1.6



GHz வேகத்தையுடைய Intel Z2560 Processor ஐயும் இணைக்கப் பெற்றுள்ளது. 1GB RAM இதில் உள்ளது. 3 megapixel திறனுடைய பிரதான Camera வையும் 1.3 megapixel திறனுடைய முன்புற Camera வையும் இது தன்னகம் கொண்டுள்ளது.


மேலும், WiFi a/b/g/n (2.4/5GHz), WiFi Channel Bonding, WiFi Direct, Bluetooth 4.0, USB 2.0 போன்ற வசதிகளையும் இது கொண்டிருப்பதுடன், 16GB மேம்படுத்தத்தக்க உள்ளக நினைவகத்தைக் கொண்டதாகவும் இது காணப்படுகின்றது.

இதன் அறிமுக விலை 399 டொலர்கள் ஆகும்.



# Windows 8 இல் வேகமாகவும் இலகுவாகவும் பணியாற்றலாம்...!

Windows 8 இயங்குதளம் இயங்கும் விதம், இயக்கப்படும் வழிமுறைகள், வேகமாகத் தொழிற்படுவதற்கான Short Keys குறித்த, அத்தியாவசியத் தகவல்களை விரைவாகக் கற்றுக்கொள்ள நீங்கள் விரும்பினால், அதற்கு ஒரு Application உங்களுக்கு உதவுகிறது.




http://windows-8-cheat-keys-for-windows-8.en.softonic.com என்ற இணைய முகவரியில் சென்று, Windows 8 இயங்கு தளத்திற்கான முக்கிய இயக்கத் தொகுப்பு, Key அமைப்புகளைக்கொண்ட Application ஐத் தரவிறக்கம் செய்துகொள்ளுங்கள். இது Keyboard Short cuts மட்டுமன்றி, தொடுதல் வழி இயக்க முறைகளையும் கற்றுத் தருகிறது.

அத்துடன், அனைத்து Program Tiles ஐயும் மொத்தமாகக் காணும் வழி, Tiles ஐ மாற்றி அமைக்கத் தேவையான வழிமுறைகள், Program களை நீக்கும் வழிகள் என அனைத்து வகையான இயக்க முறைமைகளையும் இது தருகிறது. பொதுவான பல இயக்க வழிகளுக்கான Key தொகுப்புகளும் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் Windows 8 இயங்கு தளப் பயனாளர்களுக்கு இது ஒரு முழுமையான உதவிக்கரமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 2013, ஜூலை, 17, புதன்கிழமை V




# வெற்றி வாழ்க்கைக்கு சிறந்த முன்மாதிரி: பில் கேட்ஸ்

உலகின் எதிர்காலப் பாதையைச் சரியாகக் கணித்து, அந்தத் திசையில் எல்லோரையும் விட வேகமாக ஓடி முதலிடத்தைப் பிடிப்பவர்கள் ஒரு வகை... அப்படி இல்லாமல் தானே ஒரு திசையைத் தீர்மானித்து, ஒட்டு மொத்த உலகத்தையும் அந்தத் திசையில் தன் பின்னால் ஓடிவரச் செய்பவர்கள் இரண்டாவது வகை. இதில் பில் கேட்ஸ், இரண்டாவது வகையைச் சேர்ந்தவர். 'உழைக்க மட்டுமல்ல; உழைப்பை விட்டு விலகியும் இருக்கத் தெரிய வேண்டும்' இதுதான் பில் கேட்ஸ் நமக்கு உணர்த்தியிருக்கும் சமீபத்திய பாடம். அவருடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் ஒரு பொருள் இருக்கிறது. அவருடைய வாழ்க்கை முறை ஒரு எம்.பி.ஏ பாடத் திட்டத்துக்கு நிகரானது.






பில் கேட்ஸும் அவரது நண்பர் போல் அலெனும் (அன்றும் இன்றும்)

பாடசாலை காலத்திலேயே கொடுக்கிற பாடத்திட்டத்தைப் படிப்பதைவிட, விருப்பமானதைப் படிப்பதுதான் சிறந்தது என்பதை இவர் நம்பினார். ஏனைய மாணவர்களிடமிருந்து வேறுபட்டு, படிப்பில் ஆர்வமில்லாமல் இருந்த பில் கேட்ஸை, சியாட்டல் நகரின் லேக்சைட் பாடசாலையில் அவருடைய பெற்றோர் சேர்த்தனர். அங்கே பில் கேட்ஸை பெரிதும் ஈர்த்தது அளவில் பூதம் போல இருந்த 'கணினி' ஆகும்.



அந்தக் காலத்தில் கணினியை விஞ்ஞான கூடங்களில் மட்டுமே பயன்படுத்தினார்கள்.இரவு-பகலாக அதன் முன் தவம் கிடந்த பில் கேட்ஸ், தானாகவே புத்தகங்களையும் கையேடுகளையும் படித்துக் கணினி மொழியான 'பேசிக்'கில் (Basic) ப்ரோகிராம் எழுதத் தொடங்கினார். அவருடைய பாடசாலைத் தோழர் போல் அலெனுக்கும் இதே ஆர்வம். திடீரென்று ஒருநாள், 'இனிமேல் மாணவர்கள் கணினியை இலவசமாகப் பயன்படுத்த முடியாது' என்ற அறிவிப்பு வந்தது. இருவரும் கவலைப்பட்டனர்.

அந்தக் காலகட்டத்தில் கணினியை வாடகைக்கு எடுத்துப் பயன்படுத்தும் பழக்கம் அதிகமாக இருந்தது. 'அந்த கணினியில் ஏதாவது குறைபாடு இருந்தால், வாடகை கொடுக்கத் தேவையில்லை' என்று வாடகைக்குக் கொடுக்கும் நிறுவனங்கள் அறிவித்திருந்தன. பில் கேட்ஸ் நினைத்திருந்தால் வாடகைக்குக் கணினி எடுத்து, அதில் உள்ள குறைபாடுகளைச் சொல்லி, வாடகை கட்டாமல் பயன்படுத்தியிருக்க முடியும். ஆனால், அவரோ கணினி வாடகைக்குத் தரும் நிறுவனங்களில் ஒன்றான 'கம்ப்யூட்டர் சென்டர் கார்ப்பரேஷனுக்குச் சென்று, அவர்களது கணினியில் உள்ள குறைபாடுகளைக் கண்டுபிடித்துத் தருவதாக ஒப்பந்தம் செய்துகொண்டார். அதனால், அந்தக் குறைபாடுகள் நீக்கப்பட்டு, அவர்களுக்கு வாடகைப் பணம் பெருகியது. அதனை செய்துகொடுத்த பில்கேட்ஸ் சம்பளமாகப் பெற்றுக் கொண்டதோ, இலவசமாக் கணினியைப் பயன்படுத்தும் உரிமையை மட்டுமே!


கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்துவதைவிட, புதிய திசையில் வாய்ப்பை உருவாக்கிக்கொள்ளும் கலை அவரிடம் நிறையவே இருந்தது. அந்த வகையில், வாகனப் போக்குவரத்து விவரத்தை கணினியில் உள்ளிடும் 'டேட்டா என்டரி' வேலை 17 வயது பாடசாலை மாணவனான பில்கேட்ஸுக்கு கிடைத்தது. ஒவ்வொரு வாகனமும் கடந்து செல்லும்போது காகிதச் சுருளில் ஒரு துளை போடப்படும். அந்தத் துளைகளை எண்ணிக் கணினியில் பதிவு செய்வதுதான் அவரது வேலையாக இருந்தது.

துளைகளை எண்ணிச் சொல்வதற்கு சாதனைம் ஒன்றைக் கண்டுபிடித்து அதற்கு 'டிராஃப்- ஓ- டேட்டா' (Traf-O-Data) என்று பெயரிட்ட பில் கேட்ஸுக்கு, இந்தத் தொழிலில் நல்ல லாபம் கிடைத்தது. போக்குவரத்து விபரங்களை அலசி அதை நெறிப்படுத்துவதற்காக, பல நகராட்சிகள் அந்தக் கருவியை நாடியபோது, "இனிமேல் நாங்களே அந்த வேலையை நகராட்சிகளுக்குச் செய்து தருவோம்" என்று அமெரிக்க மத்திய அரசு அறிவித்துவிட்டது. இதனால், பில் கேட்ஸின் வியாபாரம் முடங்கிப் போனது.

(தொடரும்)


எம்-ஜருக் முஹம்மத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலக்கங்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.

தளிர்கரம்








இலக்கங் களை ஒத்த வர்ணம் தீட்டுக.

# தொடர்பாடல் செயன்முறையின் பணிகள்

ஊடக பாடநெறி 42

தொடர்பாடல் செயன் முறை செயலொழுங்கு என்பது குறிப்பிட்ட நோக் கங்களை அடிப்படை யாகக்கொண்டு மேற்கொள்ளப்படு கின்றபோதும் தொடர்பாடலின் பணிகளை திட்டவட் டமாக வரையறுத்துக் கூறமுடியாது. ஏனெனில், சமூக மாற்றங்களுக்கு ஏற்ப வும், சமூக செயல் ஒழுங்கு முறைமைக்கு ஏற்பவும் தொடர்பா டல் பணிகள் விரிவ டைந்தும் மாற்றம டைந்தும் செல்வதே காரணமாக அமை கின்றது. ஆரம்பகா லத்தின் தொடர்பா டல் பணிநிலைக்கும் நவீனகாலச் சமூக தொடர்பாடல் பணிநிலைக்கும் இடையில், பல்வேறுபட்ட வளர்ச் சிப்போக்குகளை அவதானிக்க முடிகின்றது. செய்தி, தகவல் கருத் துக்களை மாத்திரம் பரிமாறுவது தொடர்பாடல் பணியாக அமையாது.





தொடர்பாடல் செயல் ஊடாக பல்வேறு நோக்கங்கள் தனிமனித, சமூக ரீதியில் எதிர்ப்பார்க்கப்படுகின் றது. அந்தவகையில், தொடர்பாடல் செயன்முறையின் நோக்கங்களும் பணிகளும் அந்நாடுகளின் பின்னணி இயல்புகளைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன.

லக்ஸ்பெல், தொடர்பாடல் செயன் முறையானது, வாழ்வதற்கும் சமூ கத்தின் அனைத்து மட்டங்களிலும் தொடர்பினை ஏற்படுத்தல், கலாசார விழுமியங்களில் கடத்தல் ஆகிய பணிகளை இடம்பெறச் செய்வதா கக் குறிப்பிடுகின்றார்.

**Denis mcquail** *(1987)* சமூகத்திற்குத் தயாராகுதல், Mobilizing Function பணிகளைப் பிரதானமாகக் கொள்வதாகவும் தகவல் தொடர்பு பொழுதுபோக்கு, தயாராக்குதல் ஆகிய பணி களை முன்னெடுப்பதாக சுட்டிக்காட்டுகின்றார்.

**Joseph. R.Dominick** *(1990)* தொடர்பாடல் உயிர் வாழ்வ தற்கு, பிணைப்புக்கு, விழுமி யங்களை கடத்துவதற்கு, பொழுது போக்கு, விளக்கமளித் தல் செயற்கரு மங்களை ஆற்றுவதாக வும் Macbride report (1987) தகவல் சமூக மயமாக்கல், ஊக்கமளித்தல், கலந்துரையாடல், அறிவூட்டல், கலாசார அபிவிருத்தி, பொழுது போக்கு, ஒருங்கிணைப்புப் பணிகளை முன்னெடுப்பதாகவும் எடுத்துக் கூறுகின்றார்.




**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

| | |
|---|---|
| **අම්මා:** | **දුව නැගිටින්න. අද නේද සිංහල භාෂා දිනය?** |
| | துவ நெகிடின்ன. அத நேத சிங்ஹல பாஷா தினய? |
| அம்மா: | **மகள் எழும்புங்கள். இன்றுதானே சிங்கள மொழித் தினம்?** |
| **දුව:** | **ඔව් අම්මේ, දැන් වෙලාව කීයද?** |
| | ஒவ் அம்மே, தென் வெலாவ கீயத? |
| மகள்: | **ஆம் அம்மா, இப்போது நேரம் என்ன?** |
| **අම්මා:** | **උදේ හයයි. මේ කිරි එක බීලා ලෑහැස්ති වෙන්න.** |
| | உதே ஹயய். மே கிறி எக பீலா லெஹெஸ்தி வென்ன. |
| அம்மா: | **காலை ஆறு மணி. இந்தப் பாலைக் குடித்துவிட்டு ஆயத்தமாகுங்கள்.** |
| **දුව:** | **හොඳයි අම්මේ. මගේ අලුත් ගවුම තියෙනවා නේද?** |
| | ஹொந்தய் அம்மே. மகே அலுத் கவும தியெனவா நேத? |
| மகள்: | **நல்லது அம்மா. என்னுடைய புதுச் சட்டை இருக்கிறது தானே?** |
| **අම්මා:** | **ඔව් දුව, ඇඳ උඩ තියෙනවා.** |
| | ஒவ் துவ, எந்த உட தியெனவா. |
| அம்மா: | **ஆம் மகள், கட்டிலில் இருக்கிறது.** |
| **දුව:** | **මොනවද අම්මේ උදේට කන්න තියෙන්නේ?** |
| | மொனவத அம்மே உதேட கன்ன தியென்னே? |
| மகள்: | **காலையில் சாப்பிட என்ன இருக்கிறது அம்மா?** |
| **අම්මා:** | **කිරිබත් දුව, එන්න කන්න.** |
| | கிறிபத் துவ, என்ன கன்ன. |
| அம்மா: | **பாற்சோறு மகள், சாப்பிட வாருங்கள்.** |
| **දුව:** | **කිරිබත් හරි රසයි අම්මේ.** |
| | கிறிபத் ஹரி ரசய் அம்மே. |
| மகள்: | **பாற்சோறு நல்ல ருசி அம்மா.** |
| **අම්මා:** | **කාලා - දෙවියන් වැඳලා යන්න.** |
| | காலா - தெவியன் வெந்தலா யன்ன. |
| அம்மா: | **சாப்பிட்டு - கடவுளை வணங்கிவிட்டுப் போங்கள்.** |
| **දුව:** | **හොඳයි අම්මේ, මම දෙවියන් වැඳලා එන්නම්.** |
| | ஹொந்தய் அம்மே, மம தெவியன் வெந்தலா என்னம். |
| மகள்: | **நல்லது அம்மா, நான் கடவுளை வணங்கிவிட்டு வருகிறேன்.** |
| **අම්මා:** | **හා හොඳයි.** |
| | ஹா ஹொந்தய். |
| அம்மா | **ஹா நல்லது.** |

சிறிது நேரத்தில்...

| | |
|---|---|
| **දුව:** | **එහෙනම් අම්මේ මම ගිහින් එන්නම්.** |
| | எஹெனம் அம்மே மம கிஹின் என்னம். |
| மகள்: | **அப்போ அம்மா நான் போய் வருகிறேன்.** |
| **අම්මා:** | **හොඳයි දුව, ඔයාට දෙවියන්ගේ පිහිටයි.** |
| | ஹொந்தய் துவ, ஒயாட்ட தெவியன்கே பிஹிட்டய். |
| அம்மா: | **நல்லது மகள், உங்களுக்கு கடவுள் துணை.** |

### பயிற்சி

**தமிழில் மொழிபெயர்க்க**

1. සිංහල භාෂා දිනය.
2. දැන් වෙලාව කීයද?
3. මම ගිහින් එන්නම්.






**இறந்தகால தனி வாக்கியங்களில், What, Where, When, How, Whom முதலான வினாச்சொற்களுடன் ஆரம்பிக்கும் வினா வாக்கியங்களை மேலும் இங்கே பயில்வோம்.**

(அ) நீ அந்தக் கதையை அவனிடம் கூறினாய்.
You told him the story.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) நீ அந்தக் கதையை அவனிடம் கூறினாயா?
Did you tell him the story?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(இ) நீ அவனிடம் என்ன கூறினாய்?
What did you tell him?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

- You told. (Affirmative)
  நீ கூறினாய். (உடன்பாடு)
- Did you tell? (Interrogative)
  நீ கூறினாயா? (வினா)
- What did you tell? (Interrogative)
  நீ என்ன கூறினாய்? (வினா)

*—*—*—*

(ஈ) நீ வங்கி முகாமையாளரைச் சந்தித்தாய்.
You met the bank manager.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(உ) நீ வங்கி முகாமையாளரைச் சந்தித்தாயா?
Did you meet the bank manager?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஊ) நீ அங்கே யாரைச் சந்தித்தாய்?
Whom did you meet there?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

- You met. (Affirmative)
  நீ சந்தித்தாய். (உடன்பாடு)
- Did you meet? (Interrogative)
  நீ சந்தித்தாயா? (வினா)
- Whom did you meet? (Interrogative)
  நீ யாரைச் சந்தித்தாய்? (வினா)

*—*—*—*

(எ) நீ கண்டிக்கு பஸ் மூலம் பயணித்தாய்.
You travelled to Kandy by bus.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஏ) நீ கண்டிக்கு பஸ் மூலம்தான் பயணித்தாயா?
Did you travel to Kandy by bus?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஐ) நீ எவ்வாறு கண்டிக்குப் பயணித்தாய்?
How did you travel to Kandy?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

- You travelled. (Affirmative)
  நீ பயணித்தாய். (உடன்பாடு)
- Did you travel? (Interrogative)
  நீ பயணித்தாயா? (வினா)
- How did you travel? (Interrogative)
  நீ எவ்வாறு பயணித்தாய்? (வினா)

**குறிப்பு:** * Who- யார் * Whom- யாரை * To whom- யாருக்கு * From whom- யாரிடம் இருந்து * How- எவ்வாறு

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிஸ்டோட்டில்



அரிஸ்டோட்டில் கிரேக்க தத்துவ விஞ்ஞானி ஆவார். பிளேட்டோவும் இவரும் மேலைத்தேயச் சிந்தனையில் மிக அதிக செல்வாக்குச் செலுத்தும் தத்துவஞானிகளாகக் கருதப்படுகிறார்கள். இவ்விருவருடன் சோக்ரடீஸும் சேர்ந்து முப்பெரும் கிரேக்க தத்துவஞானிகளாக திகழ்கின்றனர். பிளேட்டோ, அரிஸ்டோட்டலின் குரு ஆவார். சோக்ரட்டீஸின் சிந்தனைகள் மற்றைய இருவரின் சிந்தனை மீதும் ஆழமான தாக்கம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும், மாவீரன் அலெக்சாண்டர் இவ்விருவரினதும் சீடராவார்.

எம்.ஆர்.பர்ஹத் ரிபா,
கிரி/சுலைமானியா மு.வித்., குரீகொடுவ, பஹமுனே.

# தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துகளால் ஏற்படும் தீய விளைவுகள்

தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துகளை உட்கொள்வதனால், இயற்கையாக உற்பத்தியாகும் ஓமோனின் அளவு குறைவடையும். ஈரல் புற்றுநோய், என்புகளை இயக்கும் மூட்டுகளில் வலி ஏற்படும், மூட்டுவாதம், மலட்டுத் தன்மை, மாரடைப்பு, அதி உயர் குருதி அமுக்கம், இதயக் கோளாறுகள் ஏற்பட்டு உடல் பாதிப்படையும்.



சலுகைக்காக, வெற்றிக்காக ஊக்க மருந்துகளைப் பாவித்து உடலில் தீய விளைவுகளை ஏற்படுத்துவதையும் இவற்றைப் பாவிப்பதைக் கண்டறிந்த பின் விளையாட்டு வீரர்களிடமிருந்து பதக்கங்களை மீளப் பெறும்போதும் அல்லது தடைவிதிக்கப்படும்போதும் மன உளைச்சல்களுக்கு உள்ளாவதையும் சமூகத்தினால் புறந்தள்ளி வைக்கப்படுவதையும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, எமது இயற்கையான வாழ்வியலில் இந்த ஊக்கமருந்துகளைப் பாவிப்பதைத் தவிர்த்துக்கொண்டு ஆரோக்கியமாக வாழ வேண்டும்.

ஏ.எல்.நஜீம்,
மர்கஸ் அந்நூர் அரபிக் கலாபீடம், ஹிஜ்ரா நகர், நாவலடி,வாழைச்சேனை.

# பட்டாம்பூச்சி



பட்டுச் சிறகடித்துப்
பறந்து திரியும்
பட்டாம்பூச்சியே!
பல வண்ணங்களில்
பளபளக்கும்
பட்டாம்பூச்சியே!
வண்ணப் பூக்களில்
தேன் அருந்தும்
பட்டாம்பூச்சியே!


எம்.ரிஸ்லின்,
கெப்பிடிய மு.ம.வித்.,
கலேவெல.

# எமது நாட்டின் முக்கிய சீர்திருத்தங்கள்

| | |
|---|---|
| கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் | - கி.பி. 1833 |
| குறு மக்கலம் சீர்திருத்தம் | - கி.பி 1910 |
| மனிங் சீர்திருத்தம் | - கி.பி. 1920 |
| மனிங் டெவன்ஷயர் சீர்திருத்தம் | - கி.பி. 1924 |
| டொனமூர் சீர்திருத்தம் | - கி.பி. 1931 |
| சோல்பரி சீர்திருத்தம் | - கி.பி. 1947 |

எம்.ஜே.எஃப்.சம்லா,
இ/அல்-அக்ஷா மு.ம.வித்., எஹலியகொடை.

# மனிதனின் பரிணாம வளர்ச்சி



ஆதிகாலத்தில் மனிதன் மிருகங்களைப் போலவே வாழ்ந்து வந்தான். அவனுக்கென மொழி இல்லை. வீடுகள் இருக்கவில்லை. காட்டில் கிடைக்கும் உணவுகளை உண்டு வந்தான். கற்களை உராய்வதனூடாக ஆரம்ப காலகட்டத்தில் நெருப்பை உண்டாக்கத் தெரிந்துகொண்டான். மிருகங்களை வேட்டையாடி அவற்றை நெருப்பில் சுட்டுச் சாப்பிடக் கற்றுக்கொண்ட அவன், தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும் கருவிகளைச் செய்ய ஆரம்பித்தான். பின்னர், படிப்படியாக குடும்பமாகவும் குழுக்களாகவும் வாழப்பழகிக்கொண்டான்.

தமது நாளாந்த உணவிற்காகப் பயிரிட்டான். மிருகங்களைத் தமது உழைப்பிற்குப் பயன்படுத்தினான். வேட்டையாடுவதற்காகப் புதிய கருவிகளைச் செய்தான். நாகரீகம் தோன்ற வித்திட்ட முக்கியமான கண்டுபிடிப்பான எழுத்தைக் கண்டுபிடித்தான். படங்களை வரைந்து தமது எண்ணங்களை வெளிப்படுத்தினான். கடந்தகால நிகழ்வுகளைப் பதிவுசெய்யவும், அவற்றைப் படித்துப் பிறர் பயனடையவும் முடிந்ததால், மனிதன் எழுதுவதைக் கண்டுபிடித்த காலம்தான் நாகரிகம் தோன்ற ஆரம்பித்த காலம் எனலாம். தற்போது உலகம் ஒரு கிராமம் என்று கூறுமளவிற்கு மனிதன் தனது நாகரிகத்தின் மூலம் உணர்த்தியுள்ளான்.

ஏ.சீ.எப்.நஸ்ரியா,
கிரி/சுலைமானியா மு.வித்., குரீகொட்டுவ, பஹமுனே.




# சொர்க்கத்தைக் கண்ட கருமி



ஓர் ஊரில் ஒரு கருமி வாழ்ந்து வந்தான். அவன் மிகப்பெரிய பணக்காரன். ஆனால், யாருக்கும் உதவி புரியமாட்டான். ஒருமுறை அவனுக்கு சொர்க்கத்தையும் நரகத்தையும் காணவேண்டும் என்ற ஆசை வந்தது.

ஒருநாள் அவனது கனவில் ஒரு பெரியவர் தோன்றி, அவனைச் சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார். அந்தக் கருமியும் அவருடன் சென்றான்.

முதலில் அந்த பெரியவர் நரகத்துக் கூட்டிச் சென்றார். அங்கு உணவு நேரத்தில் பெரிய பெரிய அண்டாக்களில் சோறு, கறிகள் மற்றும் சுவைமிக்க உணவுப் பதார்த்தங்களும் இருந்தன. அவரவர்க்கு வாழை இலை போடப்பட்டு உணவுகள் பரிமாறப்பட்டன. அனைவரும் ஆவலுடன் உணவில் கை வைத்தார்கள். அந்தோ பரிதாபம்! அனைவராலும் கையை நீட்டி உணவுப் பொருளை எடுக்க முடிந்ததே தவிர, கையை மடக்கி வாய்க்கு உணவைக் கொண்டு செல்ல முடியவில்லை. அவர்களுக்குப் பசியோடு ஆத்திரமும் சேர்ந்துகொண்டது. அனைத்து அண்டாக்களையும் கீழே தள்ளிவிட்டு, அவற்றிலுள்ள உணவை வீணாக்கிவிட்டுத் தாங்க முடியாத பசியுடன் அழுதனர். இப்படி அழுதுகொண்டே இருந்தனர்.

பின்னர் அந்தப் பெரியவர் அந்தக் கருமியைச் சொர்க்கத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கும் இதேபோன்று அண்டாக்கள் நிறைய அறுசுவை உணவுகள் வைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்தவர்களுக்கும் கையை நீட்டி உணவை எடுக்க முடிந்தது. ஆனால் தங்கள் வாயருகே கொண்டு செல்லக் கையை மடக்க முடியவில்லை. எனினும், அவர்களில் ஒருவர் தனது நீட்டிய கையினால் இனிப்பு வகைகளை எடுத்து எதிரே இருந்தவர் வாயருகில் நீட்டினார். மடக்கத் தானே முடியாது? கையை நீட்டி எதிரே இருப்பவரின் வாயில் ஊட்ட முடியுமல்லவா? இவ்வாறே அனைவரும் ஒருவருக்கொருவர் ஊட்டி மகிழ்ந்தனர். அனைவரின் வயிறும் நிரம்பியது.

கருமி கனவிலிருந்து மீண்டான். ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதே சொர்க்கம் என்பதை அவன் புரிந்து கொண்டான. தான் மட்டும் சுகமாய் வாழ நினைப்பது நரகம் என்பதை உணர்ந்தான். அன்றிலிருந்து அவன் அனைவருக்கும் உதவிகள் பல புரிந்து நல்வாழ்வு வாழத் தொடங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆங்கிலேயரின் வரி விதிப்பு முறை

அலெக்சாண்டர் அவர்களின் ஆலோசனைப்படி ஏற்படுத்தப்பட்ட 'ஜூரி' சபையில் ஆரம்பத்தில் 13 உறுப்பினர்கள் இருந்தனர். ஆனால், நாளடைவில் அந்த எண்ணிக்கை குறைக்கப்பட்டது. தென்னை வரி மற்றும் ஆபரண வரி ஆகிய வரி விதிப்புக்களினாலும் வர்த்தக சந்தைகளில் அமுல்படுத்தப் பட்ட வரி விதிப்புக்களினாலும் ஏராள மான பிரச்சினைகள் தோன்றியிருந் தன. பொருட்களை விற்பதற்கென வந்த வர்த்தகர்களிடம் வரி விதிப்பது அந்நாட்களில் வழக்கமான ஒன்றாக இருந்தது.

ஆங்கிலேயர்கள் இலங்கைக்கு வருகை தரும் வரையில் இந்நாட்டில் அத்தகைய வரிவிதிப்புக்கள் இருந்திருக்கவில்லை. ஒல்லாந்தர்களின் ஆட்சி காலத்தில் வணிகச் சந்தைகளில் சிறுதொகை வரி அறவிடப்பட்டது. சிற்றுண்டிச்சாலைகளில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் பாத்திரங்கள் ஆகியவற்றின் சுகாதாரம் மற்றும் விற்பனை நிலையங்களில் பயன்படுத்தப்பட்ட நிறுவைப் படிக்கற்களின் நம்பகத்தன்மை ஆகியவற்றை பரீட்சிப்பதற்கென ஒரு சிறப்புக் கண்காணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். வர்த்தக நிலையங்களில் விற்கப்பட்ட தானிய வகைகளுக்கும் இரண்டு வீத வரியும் மேலும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பொருட்களுக்கு மூன்று வீத வட்டியும் வணிகச் சந்தைகளில் அறவீடு செய்யப்பட்டது. கி.பி 1807 ஆம் நூற்றாண்டின்போது மெயிட்லண்ட் ஆளுநரின் ஆணையின்படியே இந்த வரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த வரிகளால் மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. இதன் காரணமாக மக்கள் மத்தியிலிருந்து அதிருப்தி உணர்வுகள் வெளிப்பட்டன. சில காலங்களின் பின்னர் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு அவற்றின் உள்ளடக்கத்திற்குச் சரிசமமான வரி விதிப்பை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்து வித்தியாசங்களில் X அடையாளமிடுக 1



## 4

இங்குள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி, குறைந்தது 10 சொற்களையேனும் அமைக்க




## இடைவெளிகளை நிரப்புக 3




## ஒத்தகருத்துச் சொல்லில் கோடிடுக 5

1. அன்பு - (கோபம்/பாசம்/பரிதாபம்)
2. கை - (விரல்/அங்கம்/கரம்)
3. வயல் - (கண்டல்/கழனி/வெளி)
4. சூரியன் - (ஞாயிறு/திங்கள்/புதன்)
5. நீர் - (தேநீர்/கடல்/புனல்)





**தயாரிப்பு - ஸாரா**


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.07.24 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 426
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## கடிகாரங்கள் குறித்து நிற்கும் நேரம் என்ன? 2



## குறுக்கெழுத்துப் போட்டி இல. 42



### மேலிருந்து கீழ்


01. தெய்வப் பசு.
02. நெற்றியிலிடுவது.
05. முகம்.
07. ஆரம்ப நிலையில் இருக்கும் உயிர்.
09. ஒரு வகைப் பூச்சி. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. விளக்கேற்றும் மாதம்.
03. 'கொடு' என்றும் அர்த்தப்படுத்தலாம்.
04. சுவர்க்கம்.
06. வில். (மாறியுள்ளது)
07. போதை தரும்.
08. ஒரு நோய்.
09. வீதி. (மாறியுள்ளது)

## அறிவுக்கு விருந்து - 423 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 02**



**போட்டி: 03**




**போட்டி: 04**

1. சிங்கம் - குருளை
2. நெல் - நாற்று
3. வாழை - கச்சல்
4. அணில் - குஞ்சு
5. பனை - வடலி

**போட்டி: 05**

1. கொங்கோ நதி - ஆபிரிக்கா
2. பிரம்மபுத்ரா நதி - ஆசியா
3. டன்யூப் நதி - ஐரோப்பா
4. அமேசன் நதி - தென் அமெரிக்கா
5. மிசூரி மிசிசிப்பி நதி - வட அமெரிக்கா

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 41 விடைகள்



## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 423 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம். சுதாகரன், அம்புலுவாவ.

**போட்டி: 02**
அ.க.நபீஸா, பாலமுனை - 03.

**போட்டி: 03**
த.நிதர்சனா, சுழிபுரம்.

**போட்டி: 04**
பி. இரஜீபன், இரத்தினபுரி.

**போட்டி: 05**
சம்ஹறா சித்தீக், வறக்காப்பொளை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ரிஸ்லா ரிஸ்வி, கொழும்பு - 02.
- யோ. ஆறுசன், திருகோணமலை.
- ஜே. அக்தஸ், சாய்ந்தமருது - 09.
- சாய்னா மரியம், புத்தளம்.
- என். பவநிஷா, அக்கரப்பத்தனை.
- அ. டினோத், கல்முனை.
- எ.ஃப். இப்கா, திக்குவல்லை.
- சி. ஸ்ரீபிரகாஷ், இம்புல்பிட்டிய.
- எம். ஐ. ஆசிக், படுப்பிடிய.
- எம். இல்ஹாம், புப்போகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேகாலையைச் சேர்ந்த சித்திரசேகர்-கிருஷ்ணவேணி தம்பதியரின் செல்வப் புதல்விகளான ஸதுர்ஷனா-ஸதுர்ஷிகா ஆகிய இருவரும் 08.07.2013 அன்று தமது முதலாவது பிறந்ததினத்தைக் கொண்டாடினர். இவர்களைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.





புத்தளம், சவீவபுரத்தைச் சேர்ந்த சப்ராஸ்-ஜெஸ்மின் தம்பதியரின் செல்வப் புதல்வன் ஷிமார் அஹ்மத், 09.07.2013 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

கொழும்பு-12, குணசிங்கபுரவைச் சேர்ந்த இசாக்-றழீனா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ரிஸ்லா, 15.07.2013 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.








மருதமுனை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மர்ஹூம் எம்.ஏ.எம். அலாவுடின் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் இறுதி சுற்றுப்போட்டி, மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் 'மருதமுனை எலைட் விளையாட்டுக்கழகம்' கிண்ணத்தைக் கைப்பற்றியது. மருதமுனை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஏ.ஆர்.அமீர் மற்றும் ரீஜ் மேன் நிறுவனத்தின் உரிமையாளர் ஏ.எம்.மாலிக் ஆகியோரிடமிருந்து எலைட் அணித்தலைவர் ஏ.எச்.எம்.வாஸிம் கிண்ணத்தைப் பெறுவதையும் எலைட் விளையாட்டுக்கழக உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.

*(படமும் தகவலும்: ஏ.ஆர்.ஏ. நபாயிஸ்)*







ஜுமானா அஸீம்,
மஹ்மூத் மகளிர் கல்.,
கல்முனை.



நவீட் அஹமட்,
ஸ்ரீ ஜயவர்தனபுர இந்து வித்.,
ராஜகிரிய.



எஃப்.பரீஹா,
பாத்திமா பா. மு.ம.வித்.,
கெலிஓயா.



எஃப்.சஸ்மா,
முஸ்லிம் ம.வித்., கஹடோவிட்ட.



எச்.ஹஸ்லினா பானு,
கணமூலை மு.ம.வித்., மதுரங்குளி.



ஆர்.சரண்யா,
நாவலர் த.ம.வித்., நுவரெலியா.






ஆர்.ரக்ஷா,
புனித தோமையார் பெ.பாட., மாத்தளை.

றஹ்மா பஸ்லுன்,
அல்-பாஸியதுல் நஸ்ரியா மு.ம.வித்.,
பேருவளை.



எஃப்.சுஹைஹனா,
பதுரியா மத்திய கல்.,
மாவனல்லை.

# உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...




சல்வடோர் டாலி (Salvador Dali),1904 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி ஸ்பெய்னின் கட்டலோனியாவில் உள்ள ஃபிக்கரெஸ் (Figueres) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் மிகை யதார்த்தவாத (ஆழ் யதார்த்த வாதம் -Surrealism) ஓவியர் ஆவார். தவிர, செதுக்கல், புகைப்படப் பிடிப்பு, எழுத்துத்துறை, திரைப்படத்துறை போன்ற துறைகளிலும் புகழ்பெற்று விளங்கினார்.

டாலி, மிகுந்த கற்பனைத்திறனுடையவர். இவரது ஓவியத்திறன், மறுமலர்ச்சி ஓவியர்களின் செல்வாக்கினால் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவரது ஓவியமான 'நீங்கா நினைவு' (The Persustence of Memory), 1931 ஆம் ஆண்டில் தீட்டி முடிக்கப்பட்டது. யானைகளைப் பிரதிபலிக்கும் அன்னங்கள், Galatea of the Spheres போன்றவை உட்பட, மேலும் பல ஓவியங்களை வரைந்துள்ளார். மிகை யதார்த்தவாதப் பாணியில் கிறிஸ்தவக் கருத்துக்களைக் கலையாக்கிப் பல்வேறு ஓவியங்களையும் வரைந்துள்ளார். இறுதி இராப்போசனம் அருட்சாதனம், சிலுவையில் புனித யோவானின் கிறிஸ்து போன்றவை அவற்றுள் சிலவாகும். இவர், 1989 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் திகதி உயிர் நீத்தார்.






சல்வடோர் டாலி
(1904-1989)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதையொன்று சொல்வேன்

# சீருடை

பொழுது விடிந்தது. பாலா நித்திரையிலிருந்து விழித்தெழுந்தான். காலைக் கடன்களை முடித்தான். பாடசாலை செல்வதற்கு ஆயத்தமானான். பாடசாலைச் சீருடையைத் தேடினான். காணவில்லை. அம்மாவிடம் கேட்டான் அம்மாவும் தேடினார். சீருடையைக் காணவில்லை. பதற்றமடைந்தான். எவ்வாறு இன்று பாடசாலை செல்வது? இருப்பது ஒரேயொரு உடைதானே? அழவேண்டும்போல் இருந்தது. சுதாகரித்துக்கொண்டான். பாடசாலை புறப்படும் நேரமும் நெருங்கியது. அயல்வீட்டு ராமு தினமும் பாலாவுடனேயே பாடசாலை செல்வதால் இன்றும் அவன் வந்துவிடுவான். அவனுக்கு என்ன கூறுவது? பாலா யோசித்தான். ஆம்! கதவு தட்டப்படுகின்றது... கதவைத் திறந்தான்... வெளியே ராமு நின்றுகொண்டிருந்தான்.

**(இந்தக் கதையை உங்களால் தொடர முடியுமா? முடிந்தால் 20 வரிகளுக்குள் கதையைத் தொடருங்கள் கதையின் மிகுதியை மற்றுமொருவரும் தொடர்வதற்கு ஏதுவாக அமைத்து விடுங்கள்.)**



# 'கேட்' மெனர்ஸ் (Gate Manners)



ஒருசிலர் பிறரது வீடுகளுக்கோ அல்லது பிற இடங்களுக்கோ செல்கையில் நுழைவாயில் அதாவது, (Gate) 'கேட்' டினை அல்லது கதவினை திறந்துக் கொண்டு செல்கையில் **Gate Manners** எனப்படும் ஒழுக்கப் பண்பினை (நன்நடத்தை) கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். அதாவது உள்நுழையும்போதும் சரி, வெளியேறும்போதும் சரி கதவினை அல்லது கேட்டினைச் சரியாகப் பழைய நிலைக்குச் சாத்திவிட்டுச் செல்வதே நல்ல ஒழுக்கப் பண்பாகும். சிலர் அப்படியில்லாமல், கதவினையோ, கேட்டினையோ திறந்துவிட்டு அப்படியே பூட்டாமல் சென்றுவிடுவர். இப்படிச் செய்பவர்கள் ஒழுக்கப் பண்பற்றவர்கள் என்ற பட்டியலிலேயே சேர்க்கப்படுவர். எனவே, இந்தத் தவறான பண்பினைச் சிறுவயதிலேயே திருத்திக்கொண்டால் வளர்ந்த பிறகு நல்லதோர் பிரஜையாக மிளிர முடியும்.

## இப்படி இருக்காதீர்...



சிலர் எப்போதும் 'உம்' மென்று இருப்பார்கள். யாருடனும் மனம்விட்டுப் பேச மாட்டார்கள். கேட்டால், இதுதான் தமது சுபாவம் என்பார்கள். பாடசாலையில் கற்கின்ற சக மாணவர்களிலும் இப்படியானவர்கள் இருப்பர். இப்படியானவர்கள் சமூகத்திலிருந்து தங்களைத் தாங்களே ஒதுக்கிக்கொள்பவர்களாக இருப்பார்கள். அதிலும் வாழ்க்கையில் அன்றாடம் நாம் பலவிதமானவற்றைக் கற்கின்றோம். இதில் மனிதர்களை அறிவதென்பதும் ஒரு கற்றல்தான். இந்த கற்றலைப் பெறுவதற்கு முதலில் நாம் மனிதர்களுடன் பழகுதல் வேண்டும். நல்லவர்களையும் நாம் சந்திக்கலாம், தீயவர்களையும் நாம் சந்திக்கலாம். அதன்பின்னர் எதனையும் நாம் தீர்மானிக்கலாம். மாறாக 'உம்' என்று இருப்பதால் தனிமைப்பட்டு விடுவோம். முகமும் வாடிய முகமாக மாறிவிடும். பிறருக்கு விளையாட்டுப் பொருளாகவும் மாறிவிடுவீர்கள். இறுதியில் உங்களுக்கு நீங்களே உதவாப் பொருள் போல் ஆகிவிடுவீர்கள்.

## பேசுவது நான்...

# 'டொயோட்டா' கார் (Toyota)





**1933** ஆம் ஆண்டில் சாக்பிஷி டொயோடா என்பவர் தனது மூத்த மகனிடம் ஜப்பானிய ரக காரொன்றை தயாரிக்குமாறு கூறினார். ஆனால், அவரது மகனைவிட மருமகனே அந்த பொறுப்பை நிறைவேற்றினார். அவரது பெயர் இஜிடொயோடா. இதற்கமைய 1936 ஆம் ஆண்டில் டொயோட்டாவாகிய நான் முதன்முதலாக 'மொடல் A' என்ற அடையாளத்தில் அறிமுகமாகினேன். ஆனால், இந்தக் காலகட்டத்தில் இரண்டாம் உலகப் போர் ஆரம்பமாகியதால் கார் உற்பத்திகள் நிறுத்தப்பட்டு யுத்த களத்திற்கு ஏற்ற வாகனங்களைத் தயாரிக்குமாறு ஜப்பான் அரசாங்கம் கார் உற்பத்தியாளர்களைப் பணித்தது. 'ஜி' என்ற டிரக் வாகனம் தயாரிக்கப்பட்டது. இதனால், டொயொட்டா நிறுவனத்தில் மும்முரமாக 'டிரக்' வாகனங்கள் தயாரிக்கப்பட்டன. ஜப்பானில் குண்டுவீசப்படும்போது அந்தக் காலகட்டத்தில் மாத்திரம் ஆயிரம் டிரக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தன. டொயோட்டோ அவர்கள் தமது கார் தயாரிப்பில் ஊழியர்கள் தவறு செய்துவிட்டால் அடுத்த தடவை திருத்திக்கொள்ளலாம் என்று ஒத்திப்போடவில்லை. அந்த உடனேயே ஊழியர்களுக்குப் பயிற்சி வழங்கித் தவறுகளைத் திருத்திக்கொள்ளச் செய்தார். இது உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதாகவே அமைந்தது.


## நிஜம் மாறிய படம்



இங்குள்ள பெண் மிதக்கும் விரிப்பின்மீது நின்றவாறு உரையாற்றுவது போலா உங்களுக்குத் தெரிகின்றது? அதுதான் இல்லை.. உண்மையில் இந்தப் பெண் வெறும் மண் தரையில் நின்றவாறே உரையாற்றுகின்றார். அருகிலுள்ள கொடியொன்றின் நிழல் தரையில் விழுந்துள்ளதால்தான் அவர் மிதக்கும் விரிப்பின்மீது நின்று உரையாற்றுவது போன்று தோற்றமளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வரலாற்று புகழ்மிக்க படிக்கட்டுகள்


இலங்கையின் புராதனகால நினைவுச் சின்னங்களில் படிக் கட்டுகள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. பண்டையகால வணக்கஸ்தலங்கள் மற்றும் இதர இடங்களில் காணக் கிடைக்கும் படிக்கட்டுத் தொகுதிகள் நாட்டின் சிறப்புமிகு கலை அம்சமாகக் கருதப்படுகின்றன.

பண்டையகால இலங்கை யின் ஆரம்ப காலப்பகுதியில் அனுராதபுரகால கட்டடத்தின் நிர்மாணங்களில் படிக்கட்டுகள் அழகு தன்மையுடன் மிளிராத போதிலும், பொலன்னறுவை காலப்பகுதியின் பின்னர், படிக்கட்டுகள் பலவிதமான அலங்கார வேலைப்பாடுகளு டன் நிர்மாணிக்கப்பட்டன.

கட்டடத்தின் வாயிலில் உள்ள சந்திரவட்டக்கல், காவற் கோபு ரம் மற்றும் வளைவுக் கற்க ளுக்கு மத்தியில் மிகவும் அலங்கார வேலைப்பாடுகளு டன் படிக்கட்டுத் தொகுதிகளை அமைப்பதற்குச் சிற்பக்கலை வல்லுனர்கள் பெரு முயற்சி எடுத்துள்ளமை நன்கு புலப்படு கின்றது. அழகு மட்டுமன்றி, கம்பீரத்தினையும் எடுத்துக் காட்டுவது அவர்களது நோக்க மாக இருந்திருக்கும்.

வணக்கஸ்தலங்கள் சார்ந்த படிக்கட்டுத் தொகுதிகள் மதங் களின் கருத்துக்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. வாமன உருவம் அதற்கு சிறந்த உதாரணமாகும். ஆகக் கீழ் நிலைப்படியில் அதிக நிறையைச் சுமப்பது போன்றும், படிக்கட் டுகள் மேலே செல்லச் செல்ல நிறை குறைந்து செல்வது போன்றும் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

பாவம் செய்தவர்கள், அதிக சுமையை சுமக் கிறார்கள் என்பதனை சித்திரிப்பது இதன் நோக் கமாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக் கின்றனர்.







அனுராதபுரக் காலப்பகு தியில் அழகிய வேலைப் பாடுகள் மிகுந்த படிக்கட் டுகளைக் காண முடியாத போதிலும், பொலன்ன றுவை காலப்பகுதியில் இப்படிக்கட்டுக்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டுள்ள மையைக் காணலாம். பொலன்னறுவை (வட்டதாகய) படிக்கட் டுத் தொகுதி, வாமன உருவம், மர உருளை வடிவ சிற்பங்கள் என்ப வற்றால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளன.

கண்டி காலப்பகுதியில் படிக்கட்டுத் தொகுதி சார்ந்த படைப்புகள் சவளைக் கற்களால் மேற்கொள்ளப்பட்டு அலங்கார வேலைப் பாடுகள் குறைவாக இருந்தாலும், படிக் கட்டுகள் சிறப்பாகவே நிர்மாணிக்கப்பட் டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1933

**4 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1933**
**ஹங்கேரி**

25,792 சாரணர்கள்
46 நாடுகள்




கொடொல்லோ
ஓகஸ்ட் 1-16




ஹங்கேரி தேசத்தின் கொடொல்லோ (Godollo) என்ற இடத்தில் 1933 இல் நான்காம் உலக ஜம்போரி நடைபெற்றது. இதில் 46 நாடுகளைச் சேர்ந்த 25,792 சாரணர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு





சாரணர் இயக்கம் தோன்றி 25 ஆண்டு நிறைவை நினைவு கூறும் வகையில் அமைந்திருந்தது. ஜம்போரி தொடர்பான செய்தித்தாள்கள் ஹங்கேரி, ஆங்கிலம், பிரெஞ்ச், ஜேர்மன் போன்ற மொழிகளில் அச்சிடப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் உலகம் முழுவதும் 25 லட்சம் சாரணர்கள், சாரணர் இயக்கத்தில் சேர்ந்திருந்தனர்.

முதன்முதலாக விமான சாரணர்கள் Air Scouts இந்த ஜம்போரியில் கலந்து கொண்டமை சிறப்பம்சமாக இருந்தது.

சாரணர் இயக்கத்தைப் பெருமைப் படுத்தும் விதமாக முதன்முதலாக அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டன. இதற்கமைய 'வெள்ளை நிற மான்' ஜம்போரிச் சின்னமாக அறிவிக்கப்பட்டிருந்தது.




நிகழ்வு நிறைவின் போது, "எந்தவொரு துன்பத்தையும் வீரதீரச் செயலாக எண்ணி எதிர்கொள்ளுங்கள்" என்ற செய்தியை BP வெளியிட்டு அனைவரையும் வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். (தொடரும்)

தொகுப்பு: ஜனாதிபதி சாரணர்
**யோ.கேதீசன்**
SLTS BP.A.WB (SL) IAP (India)

# உயர் சாதனை சாரணர் சங்கம்- சர்வதேசம்

## ASSOCIATION OF TOP ACHIEVER SCOUTS-WORLD

Aassociation of top achiever scouts என்பது உலக சாரணர் சம்மேளனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சாரணர் அமைப்பாகும். இது 'ATAS' என்று சுருக்கமாக அழைக்கப்படுகின்றது. இந்த சர்வதேச சாரணர் அமைப்பில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அவ்வவ் நாட்டின் உயர் விருதுகளைப் பெற்றவர்கள் இதில் அங்கத்துவ உறுப்புரிமை கொண்டவர்களாக உள்ளனர். இதனாலேயே 'உயர் சாதனை சாரணர் சங்கம்- சர்வதேசம்' (Association of Top Achiever Scouts- WORLD) என்று இது அழைக்கப்படுகின்றது.

இவ் அமைப்பில் அங்கத்துவம் பெறுவதற்குப் பலர் ஆர்வம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அங்கத்துவம் பெறுவதாயின், அவர் தாய்நாட்டின் தேசிய நிலையில் சாதனையாளராக விருது பெற்று இருந்தால் அங்கத்துவம் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் ராணி விருது, ஜனாதிபதி விருது அல்லது

**விஜய் சாரணர் உலகம்**

பேடன் பவல் விருது போன்ற உயர் விருதுகளைப் பெற்ற சாரணர்கள் இதில் இணைந்துகொள்ள முடியும். அதற்கமைய, இதில் இணைந்துகொள்ள வேண்டும் எனின், விண்ணப்பப்படிவத்தினை இணையத்தில் தரவிறக்கம் செய்து அதனைப் பூரணப்படுத்தி இலங்கை ராணி அல்லது ஜனாதிபதி சாரணர் கழகத்தினூடாக அங்கத்துவத்திற்கு பொறுப்பான அதிகாரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். நீங்கள் அங்கத்துவம் பெற்று இருப்பதை Email மூலம் அறியத் தருவார்கள். அத்துடன், உங்கள் அங்கத்துவ விபரம் இணையத்தளத்திலும் தரவேற்றம் செய்யப்படுகின்றது.

இவ்வாறான தகவல்கள் சட்டதிட்டங்களை இணையத்தள முகவரி http:// www.atasapr.-org என்ற தளத்திற்குப் பிரவேசித்து தகவல்களை பெற முடியும்.

ATAS BSP
Association of Top Achiever Scouts - Philippines


The World Baden-Powell Fellowship
Association of Top-Achiever Scouts - World
Baden-Powell Fellow

இலங்கையில் முதன்முதல் அங்கத்துவத்தினை பிரதீஸ் (ஜனாதிபதி விருது) மற்றும் கேதீசன் (ஜனாதிபதி விருது, பேடன் பவல் விருது) பெற்ற பெருமையுடன் தமிழ் சாரணர் இருவர் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தமிழ் சாரணர்களுக்கு உற்சாகமும் ஆர்வத்தினையும் தருகின்றது.

2028 Sri Lanka 34 Shanmuganathan PRATHESSH 2002 President's (#4407)
2102 Sri Lanka 1298 Yoganathan KETHEESAN 2000 President's Scout (#4187), 2006 BP Award (#0024)




# கிளிநொச்சி கல்விக்கண்காட்சியில் சாரணர் சாதனை







கடந்த ஜூன் மாதம் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கல்விக்கண்காட்சியில் மூத்த சாரணர் கலாநிதி மா.புவனேந்திரன் அவர்களின் சாரணர் சாதனைகளும் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

சாரணராளராக சாதனைகள் படைத்தமைக்காகவும் திறமையாக செயற்பட்டமைக்காகவும் வாழ்க்கையில் தொடர்ந்து சாரணர் வாழ்வு வாழ்ந்தமைக்காகவும் இவருக்கு ஸ்பானிய பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கியது. இவர் மூத்த சாரணராளர்களில் ஒருவர் என்பதுடன், இங்கிலாந்தின் மகாராணி எலிசபெத்தினால் பொன்விழா நினைவு விருதினை வழங்கி கௌரவிக்கப்பட்ட தமிழ் மைந்தன் கலாநிதி மா.புவனேந்திரன் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவருக்கு 2007 ஆம் ஆண்டு இலங்கையின் ஜனாதிபதி அவர்களால் வெள்ளித்தாமரை பதக்கம் வழங்கப்பட்டது.

**விஜய் சாரணர் பக்கத்திற்கு பாராட்டு**

சாரணர் பகுதிக்குத் தனியான ஒரு பக்கம் ஒதுக்கிச் சாரணர் செய்திகளை வெளியிட்டு வருவதற்கு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். நான் 1952 ஆம் ஆண்டில் சாரணராக இணைந்து தொடர்ந்து சாரணர் சேவையிலேயே உள்ளேன். இதுவரை இப்படி எந்த பத்திரிகையிலும் பார்க்காத ஒன்றைத் தற்போது பார்த்து வாசித்து மகிழ்ச்சிடைகின்றேன். இலங்கையில் சாரணர்க்கென்று தனி பக்கமொன்றை வெளியிடும் 'விஜய்' பத்திரிகைக்கு எனது பாராட்டையும் மகிழ்ச்சியையும் நன்றியையும் அன்புடன் தெரிவிக்கின்றேன்.

-மா.புவனேந்திரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளுதுக்கிய முதியவர் உலக சாதனையில்

அரிசோனா பிராந்தியத்தைச் சேர்ந்த 91 வயதுடைய பர்லிஸ் என்பவர், அபூர்வமான உலக சாதனையொன்றை நிகழ்த்தியுள்ளார். இவரது வயதுப் பிரிவை ஒத்தவர்களுக்கிடையே நடைபெற்ற பளுதூக்கும் போட்டியில் 187.2 இறாத்தல் பளுதூக்கியே இவர் இந்த உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இவர் 2010 ஆம், 2011 ஆம் ஆண்டுகளில் உலக சாதனைகளை நிகழ்த்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதன்படி, எதிர்வரும் நொவெம்பர் மாதம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளிலும் கலந்துகொள்வதற்குத் தான் தயாராக இருப்பதாக இவர் போட்டி ஏற்பாட்டாளர்களுக்குத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





# பிரபஞ்சத்தை கண்முன்னே காணக்கூடிய வாய்ப்பு!

பிரபஞ்சமானது எவ்வளவு பரந்த அளவானது? அங்கு கோள்கள் எவ்வாறு அமையப்பெற்றுள்ளன? உண்மையில் பிரபஞ்சம் என்றால் ஒருவகையில் நம்முள் அது ஆச்சரியத்தைத்தான் ஏற்படுத்துகின்றது.

இன்று உலகம் நவீனத்துவத்தில் வளர்ச்சி கண்டுள்ள நிலையில் பிரபஞ்சத்தை நாம் கண்முன்னே கண்டுகொள்வதற்கான வாய்ப்புக் கிட்டியுள்ளது.'ஹவாஸ்' பல்கலைக்கழகத்தின் வளிமண்டலவியல் விஞ்ஞானிகள் சிலர் ஒன்றிணைந்து முப்பரிமாண நுணுக்கத்தில் பிரபஞ்ச வரைபடமொன்றை உருவாக்கியுள்ளனர். இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள கோள்களைக் கொண்டே மேற்படி பிரபஞ்ச வரைபடம் உருவாக்கப்பட்டுள்ளது.

18 நிமிடங்களைக் கொண்ட வீடியோ காட்சி அமைப்பிலேயே இந்தப் பிரபஞ்ச காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. மிகவும் உன்னிப்பாக இதனை அவதானித்தால், நமது பூமி ஒரு புள்ளி வடிவில் தெரிவதைக் காணலாம். 120 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ள கிரகங்களை அவதானிக்கக் கூடிய வாய்ப்பு இதன்மூலம் கிட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொலைந்த நகரம் மீண்டும் கண்டுபிடிப்பு!

கம்போடியாவில் அங்கோர் எனப்படும் இடமானது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமாகும். பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சமய வழிபாட்டுத் தலங்களை இப்பகுதி கொண்டிருப்பதனால், உல்லாசப் பயணங்களின் கவனத்தை ஈர்ப்பதாகவும் இது அமைந்துள்ளது. 'யுனெஸ்கோ' அமைப்பும் இதனை உலக மரபுரிமையாகப் பெயரிட்டுள்ளது.



இத்தகைய சிறப்புமிக்க இடத்தைப் பற்றி அண்மையில் மற்றுமொரு புதிய செய்தி வெளிவந்துள்ளது.

அதாவது, வரலாற்று முக்கியத்துவம் மிக்க 'மஹேந்திராபர்வதா' என்ற பழைமைமிக்க நகரமானது, மேற்படி 'அங்கோர்' நிலப்பகுதியின் கீழே எங்கோ ஒரு மூலையில் மறைந்து கிடப்பதாக நம்பிக்கையொன்று நிலவி வந்தது. இதனையொட்டி நடைபெற்ற ஆய்வுகளின் பெறுபேறாக 'பூனம் குலென்' என்ற மலையின் நிலக்கீழ் பகுதியில் இந்த நகரம் இருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'லேஸர்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியே மேற்படி மறைவான நகரத்தைக் கண்டுபிடிக்க முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஜூலை மாதம் 17 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 17, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org